விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 25 சனிக்கிழமை (09.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 202

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# சுனாமி நம்பிக்கை நிதியத்துக்கு அமெரிக்கா உதவி வழங்காது!

## அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

ஆழிப்பேரலை நிவாரணப் பொதுக்கட்டமைப்பு மீளாய்வு செய்யப்பட்டு முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி நேற்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசத்தில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் 23 ஜும்மா பள்ளிவாசல்கள் முன்பாக நடைபெற்றன. வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்பு பள்ளிவாசல்கள் முன்பாக கூடிய முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம்களுக்கான தனித் தரப்பு வழங்கப்படாது விட்டால் எந்த ஒரு முஸ்லிம் கட்சியும் பொதுக்கட்டமைப்புக்கு பிரதிநிதிகளை சிபார்சு செய்யக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (இ)

## அமெரிக்கத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

**சுனாமி ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா உதவி வழங்கமாட்டாது. இவ்வாறு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்துள்ளது.**

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்க முடியாதென அறிவித்துள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியம் சம்பந்தமாக அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக் கையிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் துரிதமாக நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலயத்தை இரத்துச் செய்யக் கோரியும் பொதுக்கட்டமைப்பை உடனடியாக அமுல்படுத்தக்கோரியும் நேற்று மட்டக்களப்பு கல்லடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆழிப்பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்த பொது மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

திருச்செந்தூர், நாவலடி, கல்லடி முகத்துவாரம் மற்றும் வேலூர் கொலனி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடல் வளம் மற்றும் வாவி வளம் ஆகியவற்றை நம்பி வாழும் இந்த மக்கள் தங்களுக்கான இருப்பிடங்களை ஏற்கனவே வசித்து வந்த இடங்களிலேயே ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் இந்த முன்வைத்தனர்.

குறிப்பிட்ட இடத்திலிருந்து பேரணியாகப் புறப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து பிரதேச செயலாளர் என். சிறிசங்கரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளித்துள்ளனர்.

இதில் 200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலய எல்லையை குறைந்தது 100 மீற்றராகக் குறைக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)

## பொதுக்கட்டமைப்பை ஆதரிக்குக முஸ்லிம் காங்கிரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். படையினர் எதற்கும் தயாராக இருக்க வேண்டும்?

### படை உயர்மட்டம் அறிவுறுத்தல்

(யாழ்ப்புாணம்)

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் எதனையும் எதிர்கொள்ளும் நிலையில் தயாராக இருக்கவேண்டும். இவ்வாறு படைத் தரப்புக்கு உயர்மட்டத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதனால் அவர்கள் ஒவ்வொரு வரும் அதனை உணர்ந்து எந்தச் சூழலையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் தயாராக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்

போரை படையினர் விரும்பாத போதும் யுத்தம் ஒன்று வருமானால் அதனை எதிர்கொண்டு முறியடித்தக்க வகையில் படையினர் உசாராக இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

## திருமலையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் சமூகம் ஓரங்கட்டப்பட்டதற்கும் பொதுக் கட்டமைப்பு ஆவணத்தில் முஸ்லிம் மக்கள் சார்பில் முஸ்லிம் பிரதிநிதிகள் கையொப்பம் இடாமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் நேற்று ஹர்த்

இருப்பிடங்களை ஏற்கனவே வசித்து வந்த இடங்களிலேயே ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கை

திலிருந்து அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு பாது

தச் சூழலையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் தயாராக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

யடித்தக்க வகையில் படையினர் உசாராக இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர். (இ-43)

பிரதிநிதிகள் கையொப்பம் இடாமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.(இ-8)

# ஐரோ. ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர். ஒன்றியத்தின் இலங்கைப் பிரதிநிதிகளான ஹன்டிலி விஜயதிலக, ஹர்சினி ஹலன்கோட ஆகிய இருவருமே யாழ். வந்தவர்கள் ஆவர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதி வழங்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுமே அவர்கள் வருகை தந்தனர்.

யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் ஹலோட்றஸ்ட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் எட், சிரேஷ்ட மேற்பார்வையாளர் பாஸ்கர் மற்றும் அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்து அவர்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததோடு இருபாலை, உரும்பிராய் பகுதிகளால் ஹலோட்றஸ்ட் நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றிய பிரதேசங்களையும் மிதிவெடி அகற்றப்பட்டு வருகின்ற பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (இ-19)




EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# பொதுக்கட்டமைப்புப் பிரதி ஹன்சார்ட்டில் இணைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சுனாமிக்குப் பின்னரான நிவாரண நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரதி கடந்த 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஜே.வி.பி யின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் பிரசார செயலாளருமான விமல் வீரவன்சவின் எழுத்துமூலக் கோரிக்கையை அடுத்து, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இந்த உடன்படிக்கையின் பிரதியை சமர்ப்பித்தார்.

இதனையடுத்து, இந்த உடன்படிக்கையின் பிரதி, பாராளுமன்ற ஹன்சார்ட்டில் இணைக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை மீதான விவாதத்தை நடாத்துவதற்குப் பாராளுமன்றத்தில் இரண்டு நாட்கள் ஒதுக்கப்படவேண்டும் என்று விமல் வீரவன்ச கோரிக்கை எழுப்பிய போதிலும், இது தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்க முடியும் என்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முன்னதாக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை யோசனைகளுக்கும் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்குமிடையில் வித்தியாசம் இருப்பதாக தெரிவித்த ஜே.வி.பி புலிகளுடன் ஒப்பமிட்ட உடன்படிக்கையின் பிரதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா என்று சவால் விடுத்திருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், இரண்டு பிரதிகளுக்குமிடையில எந்த வேறுபாடும் கிடையாது என்று தெரிவித்திருந்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுக்கப்படுமானால் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயார் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-4)


## சிறுவிளம்பரம்

**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை**
(9567)


# மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்துவதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவடடப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கல்வியியற் கல்லூரி அனுமதியின் போது பின்தங்கிய மாவட்டமாகக் கருதப்படவில்லை. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியனேத்திரன், ரி.கனகசபை, சொ.தங்கேஸ்வரி ஆகியோர் கடந்த புதன்கிழமை கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கல்வியியற் கல்லூரி அனுமதியின் போது மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாத விடயம் குறித்து உறுப்பினர்கள் செயலாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பின்தங்கிய மாவட்டப் பட்டியலில் மட்டக்களப்பு இடம்பெறாமை தவறுதலாக இடம்பெற்றுவிட்டதாகத் தெரிவித்த கல்வியமைச்சின் செயலாளர் கல்வியியற் கல்லூரி அனுமதியில் மட்டக்களப்பை பின்தங்கிய மாவட்டமாகக் கணிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வருட பல்கலைக் கழக மாணவர்களின் அனுமதியின் போது மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகக் கணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நிறுத்தல், அளவை கருவிகளுக்கு 18,19,22 ஆம் திகதிகளில் முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வர்த்தக நிலையங்களது நிறுத்தல் ,அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் நிகழ்வு எதிர்வரும் 18,19,22 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை நகர சபையில் நடைபெறவுள்ளதாக நிறுத்தல் அளவைத்திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தினங்களில் வல்வெட்டித்துறை வர்த்தக நிலையங்களது வர்த்தகாகளை தமது நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிறுத்தல் ,அளவைக கருவிகளுக்கு இந்த வருடத்திற்கான முத்திரையை தவறாது இடும்படியும் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில் எந்த மாதத்தில நிறுத்தல்,அளவைக கருவிகளுக்கு முத்திரையிடப்படுகிறதோ அன்றிலிருந்து ஒரு வருடத்திற்கு இவ் அனுமதி செல்லுபடியாகும என்த் தொிவிக்கப்படடுள்ளது. (ற-19)

# இராசி பலன்

**09.07.2005**

**(ஆனி 25, சனிக்கிழமை)**

**திருதியை முன்னிரவு 11.29 மணிவரை**
**ஆயிலியம் பின்னிரவு 12.38 மணிவரை**
**இராகுகாலம் 8.58 - 10.28 மணிவரை**
**சுபநேரம் 2.58 - 4.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், தன்னம்பிக்கை குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| மிதுனம் | மனோசங்கடம், காரிய இடையூறு, பணவிரயம், கௌரவக்குறைவு. |
| கடகம் | வெகுமானம், நல்ல வரவேற்பு, போசன நன்மை, காரிய சிந்தை. |
| சிங்கம் | சோம்பல் நிலை, பணவிரயம், எடுத்தகருமங்கள் தாமதமாகும், பிரயாணம். |
| கன்னி | தனதானியச் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மாதர் நட்பு, மன மகிழ்ச்சி. |
| துலாம் | பிரபுத்தனம், பிறருக்கு உதவுதல், ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | புதிய முயற்சி, பிரயாணம், மனச்சோர்வு, சரீரப்பிரயாசை. |
| தனுசு | மனக்கவலை, பொருள் விரயம், சரீரவியாதி, காரிய தாமதம். |
| மகரம் | மனோதைரியம், சௌபாக்கியம், எடுத்த கருமங்கள் கைகூடும், மாதர் நட்பு. |
| கும்பம் | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், போசன சுகம், கீர்த்தி. |
| மீனம் | காரிய இடையூறு, அஜீரண ரோகம், கௌரவக்குறைவு, மனக்கவலை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# பிரதமரின் சொந்தக் கணக்கில் கோடிக்கணக்கான நிதி?

(கொழும்பு)

பிரதம மந்திரி முழு இலங்கைக்கும் பொதுவானவர். அவர் அம்பாந்தோட்டையை மாத்திரம் மையப்படுத்தி தம்முடைய நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர்காசிம் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதம மந்திரியின் தனிப்பட்ட கணக்கில் கோடிக் கணக்கான ஆழிப்பேரலை நிதி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டைக்குக் கூட உரிய நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனக் குற்றஞ் சுமத்தினார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றிய கபீர்காசிம்,

கடந்த காலத்தில் சுனாமி உதவிக்கு எவ்வளவு பணமும் கிடைக்கும என்த் தெரிவித்த பிரதமர் சுனாமி நிவராணத்துக்காக வருகின்ற நிதி அனைத்தும் மத்திய வங்கிக்கு அனுப்பவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமரின் தனிப்பட்ட கணக்கில் கோடிக்கணக்கில் நிதி இருக்கின்றது என்றும் இத் தொகை முழுவதும் அம்பாந்தோட்டைக்கே செலவிடப்படும் எனவும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார் என்றும் கூறினார்.

ஆனால் இற்றைவரைக்கு அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் சிங்கள,முஸ்லிம் மககளுக்கு ஒரு உதவியும் செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# புதிய எழுதுவினைஞர்களுக்கு 11-15 வரை பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

2002ஆம் ஆண்டு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட எழுதுவினைஞர் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 3 தொகுதிகளாக நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வகையில் யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற 41 எழுதுவினைஞ்களுக்கு எதிர்வரும 11ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பானது யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் அரச சேவையின் அறிமுகம், அரசாங்க ஊழியர்களது கடமைகளும் பொறுப்புக்களும் முகாமைத்துவம், கணக்கீடு, மனிதவள அபிவிருத்தி என்பன தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியானது முழுநாள் பயிற்சி வகுப்பாக 5 தினங்களும நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற-19)

# புலிகள்-கண்காணிப்புக் குழு அம்பாறையில் சந்திப்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினருக்கும், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையில் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் 10 மணிக்கு அம்பாறை மாவட்ட செயலகத்தில இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது, அரசியல் அலுவலகங்களை இராணுவத்தினர் ஆயுதங்களுடன் வந்து சோதனையிடுவதை குயிலின்பன் கண்டித்துள்ளார்.

அம்பாறையில் பெரும்பாலும் இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் மாற்றுக்குழுக்களே தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். எனினும் இராணுவத்தினர் எம் மீதே சந்தேகம் கொண்டுள்ளனர்.

இந்நிலையிலேயே எமது அலுவலகங்கள் இராணுவத்தினரால் சோதனையிடப்படுகிறது.

இது தொடருமானால் எங்களுடைய ஆயுதத்தோடு இராணுவத்தினரின் முகாம்களுக்குள் சென்று பார் வையிடும் நிலைக்கு, இராணுவத்தினரின் செயற்பாடு அமைந்துள்ளது எனக் குயிலின்பன் எச்சரித்தார். (ச-4)

# பல்கலை ஊழியர்கள் தொடர் போராட்டம்; காரணத்தை கண்டறிய விசேடகுழு நியமனம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கான காரணத்தைக் கண்டறிவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கபபடடுள்ளது.

கல்வி அமைச்சும் தொழிற் சங்கங்களும் கூட்டாக இணைந்து இந்தக்குழு உறுப்பினர்களை பிரேரித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

கலவிசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் 12 ஆம் திகதக்கு முன்னர் அறிக்கையொன்றினை இக்குழு சமர்ப்பிக்கும்.

அதேவேளை, இக்குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை பல்கலைக்கழகங்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் றஞ்சித் மென்டிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகள் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை வேலைநிறுத்தம் தொடரும் என அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த குழு தெரிவித்துள்ளது.

கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக இதுவரை நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது எதிர்பார்க்கப்பட்ட தீர்வுகள் கிடைக்கவில்லையென அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளது. (ற-8)


## உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம். கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது. சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

# கலாசார விழா

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசெயலக கலாசார பேரவை நடாத்தும் கலாசார விழா இன்றும் நாளையும் பிற்பகல் 2மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நல்லூர் பிரதேசசெயலக கலாசார பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமான திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இன்றைய நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸும், கௌரவ விருந்தினராக கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-8)

# மாதாந்தம் பணம் கோரப்பட்டு வருவதால் முன்பள்ளிகளுக்கு சிறார்கள் சேர்க்கப்படுவதில்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது முன்பள்ளிக்குச் செல்லும் வயதுடைய கணிசமான அளவு சிறுவர்களை அவர்களது பெற்றோர்கள் முன்பள்ளி கல்விபயில அனுப்பாமல் தடுத்துவருவதாக தெரியவருகின்றது.

முன்பள்ளிகளில் பயில்கின்ற சிறுவர்களிடமிருந்து முன்பள்ளி ஆசிரியைகளுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளப்பணத்துக்கென முன்பள்ளிகளை நடாத்துகின்ற கிராமிய மட்ட அமைப்புக்கள் மாதாந்தம் பணங் கோரிவருவதாலேயே இவ்விதமான சிறுவர்களை பெற்றோர்கள் முன்பள்ளிகளுக்கு அனுப்புவதில் தயக்கம் காட்டிவருகின்றனர்.

விசேடமாக வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களிலேயே இத்தகைய நிலைப்பாடு இருந்து வருவதாக முன்பள்ளி ஆசிரியைகள் தரப்பில் கூறப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகின்ற சுமார் 540 முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளில் 80 சதவீதமானவர்களுக்கு சம்பளம் எதுவும் வழங்கப்படாமலேயே தமது சேவைகளை வழங்கி வருகின்றனர்.

ஆயினும் இத்தகைய முன்பள்ளிகளில் சேவையாற்றி வருகின்ற ஆசிரியைகளின் சேவைத்தரத்தினை வலுப்படுத்தும் பொருட்டு அடிக்கடி பயிற்சித்திட்டங்களில் அவர்கள் உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அக்காலங்களுக்கு கூட எத்தகைய கொடுப்பனவுகளும் வழங்க்ப்படுவதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதனால் சம்பளம் எதுவுமே இல்லாது சேவையாற்றி வருகின்ற முன்பள்ளி ஆசிரியைகளின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் இருள்சூழ்ந்தாகவும் காணப்படுவதாகவும் முன்பள்ளி ஆசிரியைகள் தரப்பில் கூறப்படுகின்றது. (ற-16)

# பண்டிதர் வீ.பரந்தாமனின் நூல் வெளியீட்டு விழா இன்று

பண்டிதர் வீ.பரந்தாமனின் 'வேர்-அடிவழித் தமிழ்ச்சொற்பிறப்பியற் சிற்றகரமுதலி' நூல்வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்பு உரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் மா.இரகுநாதனும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து நூல்வெளியீட்டு உரையை யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் அறிமுக உரையை முனைவர் மனோன்மணி சண்முகதாசும் மதீப்பீட்டு உரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முது நிலை விரிவுரையாளர் முனைவர் செல்லையா திருநாவுக்கரசு மற்றும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ற)

## சேது சமுத்திரத் திட்டத்தால்

# கொழும்புத் துறைமுகம் வருவாய் குறையும்

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் சூழல் ஆர்வலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளதாக சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ஏ.ஏச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் மூலம் கண்டறியப்படும் பிரச்சினைகளை இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு முன்வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பாக ஏதேனும் சிக்கல் காணப்பட்டால் அதனை முன்வைக்குமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது.

இத் திட்டம் தொடர்பான அறிவியல் விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதே இரண்டு நாடுகளுக்கும் முக்கியமானது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். சேது சமுத்திரத் திட்டத்தால் பாக்கு நீரிணையை அண்மித்த பகுதிகளில் சூழலியல் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இத் திட்டத்தினால் கொழும்புத்துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்களின் எண்ணிக்கை குறைவடையும் எனவும் இது பொருளாதாரத்தைப் பாதிக்கும் எனவும் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பான இந்திய-இலங்கை தொழில் நுட்ப நிபுணர் குழுவினருக்கிடையிலான கூட்டம் ஒன்று இம்மாதம் நடைபெறும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ9)

## சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு

# புதிய வீடுகளை அமைக்க வெனிசூலா அரசு 6.2 மில்லியன் அ.மெ.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு உரிய வீடுகளை அமைத்துக் கொடுக்க வெனிசூலா அரசாங்கம் 6.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதி உதவியின் மூலம் ஆயிரம் புதிய வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து வெனிசூலா பிரதிவெளிவிவகார அமைச்சர் வேலியம் ஈஸாரா இந்த நிதியை தமது அரசாங்கம் வழங்கும் என்றும் உறுதியளித்துள்ளார்.

இலத்தீன் அமெரிக்க நாடொன்றிலிருந்து சுனாமி நிவாரண நிதியாக பெருமளவு நிதி இலங்கைக்குக் கிடைக்கவுள்ளமை இதுவே முதற்தடவை என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசூலா ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட நிதியத்திற்கு இந்த நாட்டு மக்கள் நிதியுதவிகள் வழங்கியுள்ளனர். இலங்கையுடன் தூதரக தொடர்புகளை ஏற்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் வெனிசூலா பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேபோல் இரண்டு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது(அ9)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர்

## பாலாம்பிகை நவரத்தினம்

(புங்குடுதீவு 7ம் வட்டாரம் ஊரைதீவைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபுறோவை வசிப்பிடமாகவும் கொண்டவர்.)



பொல்லாத சுனாமி வந்து வாரிச் செல்ல
சொந்தமெல்லாம் நொந்தபடி சோர்ந்திருக்க
எந்தவழி வந்தழைத்தான் காலனவன்-நீயும்
பந்தமெல்லாம் அறுத்தெறிந்து எங்கு சென்றாய்

கண்களில் நீர் கடலலையாய் பொங்குதம்மா
கவலையினால் உள்ளமெல்லாம் வேகுதம்மா
புன்னகையின் பொக்கிஷமாய் உலவி வந்தாய்-இன்று
உன்னவனை தவிக்கவிட்டு மறைந்து சென்றாய்
சின்னவனும் தனித்து நின்று கதறுவதைப்பார்
உன்னையென்னி விம்முகின்ற பிள்ளைகளைப்பார்.
கண்ணின் மணியாயவரை வளர்த்து விட்டாயே-இன்று
தன்னந்தனியாயவரை தவிக்கவிட்டாயே

எப்படித்தான் சொல்லுவதோ இனத்தின் துக்கம்
எவரிடத்தில் கொட்டுவதோ எங்கள் ஏக்கம்
மனம்துணிந்து சென்று விட்டாய் மறந்தும் விட்டாய்
பறந்த இடம் பரமனிடம் அமைதி கொள்வாய்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கனவிற்காய் 14.01.1945

கண்ணீருக்காய் 10.01.2005

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(9731)

# இன்று ஒரு தகவல்

## குழந்தையிடம் பேசுவது எப்படி?

"உங்கள் பிள்ளை நீங்கள் சொல்வதைக் கேட்பதில்லை" என்றால் உங்களுக்கு சரியாகச் சொல்லத் தெரியவில்லை என்று அர்த்தம். அதற்காக குழந்தையைக் குறை சொல்லாதீர்கள். ஒரு குழந்தை நல்லவிதமாக வளர்வது உங்கள் கையில தான உள்ளது. குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதை விட எப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதை முதலில் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

"சா!, அதை எங்களுக்கும் சொல்லிக் கொடுங்கள். நாங்களும் அதன்படி நடந்துகொள்கிறோம்" என்கிறீர்களா? அப்படியென்றால் இவற்றை நினைவில் வைத்திருங்கள்.முதலில் உங்கள் பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பீடு செய்வதை விட்டு விடுங்கள்.கூடப் பிறந்த பிள்ளைகளுடன் கூட ஒப்பிட்டுப பேசக்கூடாது.

"உன் தங்கையைப் பார் எப்படிப் படிக்கிறாள் என்று. கணக்கில 100 இற்கு100. நீ 100 இற்கு 20!"என்று பேசுவது தப்பு. இதனால மகனுக்கு ரோஷம் வந்து படிக்க ஆரம்பித்துவிடுவான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.ஆனால் அவனுக்கு படிக்க வேண்டுமென்ற ரோஷம் வராது தங்கை மீது கோபம் தான் வரும். தங்கையை வெறுக்க ஆரம்பித்துவிடுவான்.

7 வயது சிறுவனை உணவு விடுதிக்கு அழைத்துக் கொண்டு போகிறீர்கள்.அவன் அங்கே 4வயது சிறுவன் மாதிரி விளையாட ஆரம்பித்துவிடுகிறான். நீங்கள் உடனே "வயதுக்கேற்ற மாதிரி நடந்துகொள். என்ன இது சின்னக் குழந்தை மாதிரி" என்று அதட்டக்கூடாது. அதன்பின்பு அவன் உண்மையாகவே 4 வயதுக் குழந்தை மாதிரி நடந்துகொள்ள ஆரம்பிபபான். அவனிடம் நாசூக்காக "தம்பி! சீக்கிரம் சாப்பிட்டால் வீட்டுக்குப் போய் டி.வி. பார்க்கலாம். நல்ல நிகழ்ச்சி இருக்கிறது" என்று சொலலலாம்.

உங்கள் மகன் தனது நண்பர்களோடு போகும் போது அவன் உங்கள் விருப்பப்படி ஆடை அணியவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.உங்களுடன் வரும்போது வேண்டுமானால் உங்கள் விருப்பத்தை அவனிடம் சொல்லுங்கள். ஒரு பிள்ளையைப் பார்த்து "நீ சோம்பேறி"என்று சொல்லிவிடக் கூடாது. "நீ மகாபுத்திசாலி"என்றும் அவனுக்கு ஒரு முத்திரை குத்திவிடக் கூடாது.அவன் அப்படியே நினைக்க ஆரம்பித்துவிடுவான்.

"நீ மகாபுத்திசாலி ! இந்தப் பரீட்சை உனக்கு சுலபமாகத் தான் இருக்கும்" என்று சொல்வதை விட "நீ நன்றாகப் படித்திருக்கிறாய்.நல்லவிதமாக எழுதுவாய் என்று எனக்குத் தெரியும்" என்று சொல்லலாம்.

ஒரு வீதியைக் கடக்க வேண்டும். பையன் குறுக்கே ஓடப் பார்க்கிறான். உடனே "என்ன இது? கிறுக்குத் தனமாக ஓடுகிறாய்?" என்று அவன் மீது பாயாதீர்கள். "தெருவைக் கடக்கும் போது அப்பாவின் கையைப் பிடித்துக்கொள்" என்று சொல்லுங்கள். அவன் பிடித்துக் கொண்டதும் "Very Good. நன்றாகப் பிடித்துக கொண்டாய். இப்போது தெருவைக் கடக்கலாம் வா"என்று சொலல வேண்டும். "நீ வந்து என் பிள்ளையாகப் பிறந்தாயே" என்று கூறி சலிக்கக் கூடாது. அது பிள்ளையின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

"சில சமயம் நீ எனக்கு கோபத்தை உண்டாக்கிறாய் கண்ணா" என்று கூறலாம். "என்னைக் கொஞ்சம் தனியாக இருக்கவிடு" என்று பிள்ளையைப் பார்த்துக் கத்தாதீர்கள். அது தனக்கு யாரும் ஆதரவாக இல்லை என்று நினைக்க ஆரம்பித்துவிடும். அதைவிட "இதோ பார் உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். எனக்கு இப்போது கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று சொல்லலாம். "சரி! அதன்பின் அப்பாவிடம் வரலாம்"என்று பிள்ளை புரிந்துகொள்ளும்.

பிள்ளையைப் பார்த்து 'வாயை மூடு' என்று கத்தக் கூடாது. தன் கருத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை என்று அவன நினைதது விடுவான். பிள்ளையிடம் போய் "இதோபார் ! இதைச் செய். இல்லாவிட்டால்..." என்று அர்த்தமில்லாமல் பயமுறுத்தக் கூடாது."செய்யாவிட்டால் என்ன பெரிதாக செய்துவிடப்போகிறீர்கள்"என்று நினைக்க ஆரம்பித்துவிடும். சில பேர் பிள்ளையிடம் "இப்போது என்னுடன் வராவிட்டால் உன்னை இஙகேயே விட்டுவிட்டுப் போய்விடுவேன்"என்று கூறுவதுண்டு. அப்படிச் சொல்லக் கூடாதாம். இதெல்லாம் குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் சொல்லியிருக்கும் யோசனைகள். அதனால் ஒரு பிள்ளை நன்றாக வளர வேண்டுமென்றால் அது பெற்றோரின் கையில் தான் உள்ளது.

ஒரு அப்பா ஒரு சிறுவனை அடித்துக் கொண்டிருந்தார். "ஏன் அடிக்கிறீர்கள்?"என்று கேட்டார் அம்மா. "பரீட்சையில் எருமைக்கும் பசுவுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கூட பதில் எழுதத் தெரியவில்லை இவனுக்கு" என்றார் அப்பா."அவனுக்கு அந்த வித்தியாசம் தெரியவிலலை. உங்களுக்கு இன்னொரு வித்தியாசம் தெரியவில்லை" என்றார் அம்மா." என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர்."இவன் நமது மகன் இல்லை.பக்கத்து வீட்டுச் சிறுவன்" என்றார் அந்த அம்மா.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அரசின் வீடமைப்பு செயல்திட்டம் மந்தகதியில் இடம்பெற்றுவருகிறது

## -பஃவ்ரல் அமைப்பின் தலைவர்

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான அரசாங்கத்தின் செயல்திட்டம் மந்தகதியிலேயே இடம்பெற்றுவருவதாக ப∴.வ்ரல் அமைப்பின் தலைவர் ஹிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண வேலைத்திட்டம் தொடர்பாக ப∴.வ்ரல் அமைப்பு கடந்த ஆறு மாதகாலமாக தயாரித்த அறிக்கையை வெளியிட்டு நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அமைக்கப்பட வேண்டிய 75ஆயிரம் நிரந்தர வீடுகளில் ஆயிரத்திற்கும் குறைவான வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. மிகுதி வீடுகளை அமைக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இந்த ஆறுமாத காலப்பகுதியில் நிரந்தர செயற்திட்டத்தை யார் எந்த விதத்தில் கூறினாலும் நாங்கள் இதனை மேற்பார்வை செய்தவர்கள் என்ற வகையில் நிரந்தர வீடுகளை அமைக்கும் செயற்திட்டம் மந்தகதியிலேயே இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இது தொடர்பாக இருக்கும் திட் டங்கள் குறித்து நாம் மேற்பார்வை செய்து கொண் டிருப்பதனால் 1000ற்கும் குறைவான வீடுகளே அமைக் கப்பட்டிருக்கின்றன.

மேலும், மரண அத்தாட்சிப் பத்திரம் இல்லாமல தமது வீட்டு உறுதிப்பத்திரங்கள் இல்லாமல் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் பெருமளவானோர் உள்ளனர். இதனால் வடக்கு-கிழக்கு மற்றும் பிரதேசங்களில் எதிர்காலத்தில் தேர்தல் ஒன்று நடாததப்படுமாயின் மூன்றின் ஒரு வீதமானோர் வாக்களிகக முடியாத நிலை ஏற்படும். அப்படியானால் தேர்தல் ஒன்றை எவ்வாறு நடாத்துவது? பொதுத் தேர்தலாக இருக்கட்டும், ஜனாதிபதித் தேர்தலாக இருக்கட்டும் முழுநாட்டிலும் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்.

சுனாமியினால் மூன்றில் ஒரு பகுதியினருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்காவிட்டால் தேர்தலை நடாததுவது முடியாத காரியமாகும் என்றும் சுட்டிக் காட்டினார். (ற-8)

# சர்வதேச மனிதவுரிமைச் சாசனத்துக்கேற்றதான புலிகளின் உரிமைப்போராட்டம் பயங்கரவாதமல்ல

(கொழும்பு)

இலங்கையின் பாராளுமன்றம் உருவாக்கிய அரசியலமைப்புக்கள், சட்டங்கள் அத்தனையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அடக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. 1987 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை கொழும்பில் வைத்து அணிவகுப்பு மரியாதையின்போது தாக்கும் முயற்சியை மேற்கொண்ட கடற்படையைச் சேர்ந்தவரை நீதிமன்றம் தண்டிக்கவில்லை. பின்னர் அவர் மன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இததகைய செயல்களினால் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தைப் பற்றி பேசுவதற்கு தார்மீக உரிமையைக கொண்டதலல. இவ்வாறு தமிழத் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

மாவைசேனாதிராஜா பாராளுமன்றத்தில் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கு நிதி வசதியளிப்பதைக் கட்டுப்படுததும் சட்டமூலம் தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச பயங்கரவாதம் காரணமாக ஆயுதப் போராட்டம் தலையெடுத்தது. படையினரின் அட்டூழியங்களிலிருநத தமிழர்களைக் காப்பதற்கு விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தை நடத்தினர். தென்னிலஙகை பயங்கரவாதிகளை அடக்குவதற்கென்று கூறி ஜெயவர்த்தனா பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தார். பின்னர் அது தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை அடக்குவதற்கு பயன்பட்டது. தமிழர்கள் தமது இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் போது இலங்கையின் எந்தவொரு அரசியல் சட்டமும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. இலங்கையின் அரசியற் சட்டத்தை எக்கட்டத்திலும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழரின தேசிய உணர்வு அடக்கப்பட முடியாதது. இலங்கையின் அரச பயங்கரவாதம் பற்றி நாம் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறுவோம் என சேனாதிராஜா மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழதேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றுகையில், சர்வதேச பயங்கரவாதம் என்பது வேறு. ஒரு இனத்தின் விடுதலைப்போராட்டம் என்பது வேறு. பின்லேடனின் தாக்குதல்கள் அமெரிக்காவினுள் நடத்தப்பட்டதால் அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறது. பயங்கரவாதத்திற்கு நிதி வசதியளிபபதை சர்வதேச ரீதியில் தடுத்து நிறுத்தும் சாசனத்தை இலங்கையில் அமுல்படுத்துவதற்கு இலங்கையரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் அவசரம் என்ன? விடுதலைப்புலிகள் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகிறார்கள். சர்வதேச பயங்கரவாதத்தை தமிழரின் விடுதலைப் போராட்டத்துடன் முடிச்சுப்போடுவதெப்படி? இலங்கையில் தமிழர்கள் அரசியல் ரீதியில் பழிவாங்கப்படுகிறார்கள். இலங்கையின் அரசியற் சட்டம் தமிழர்களின் சட்டபூர்வமான அரசியல் உரிமைகளை வழங்கவில்லை.

சர்வதேச மனிதவுரிமைகள் சாசனத்தின்படியான சுயநிர்ணய உரிமைகளை அடைவதற்கு விடுதலைப் புலிகள போராடிக்கொண்டிருக்கிறார்கள். இது பயங்கரவாதமல்ல. நீங்கள் கனடாவின் கியூபெக் மாகாணத்தின் அரசியற்சட்டத்தைப் படித்தல் வேண்டும் என அவர் தெரிவித்தார். (அ-6)

# யாழில் சேதமடைந்த ஆலயங்களை புனரமைக்க மிக விரைவில் நிதி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சென்ற வருட இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்ததத தினால் இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள சைவ ஆலயங்கள் சேதமடைந்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கபபட்ட சைவ ஆலயங்களின் விபரங்களை கலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் திரட்டிவந்தது.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில சுனாமியினால் பாதிபபுக்குள்ளாகிய மருதங்கேணி, காரைநகர், தெல்லிப்பழை, பருத்தித்துறை,ஊர்காவற்றுறை,மாமுனை, உடுத்துறை, ஆழியவளை, குடத்தனை, வெற்றிலைக்கேணி, கீரிமலை,தும்பளை,ஆதிகோவிலடி,கற்கோவளம், நெல்லியடி, பொலிகண்டி போன்ற பகுதிகளில் 58 இந்து ஆலயங்களும், இந்து அலுவல்கள் இந்துசமய மற்றும் கலாசார மண்டபம்,நூலகம் என்பனவும சேதமடைந்துள்ளதாக விபரம் சேகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த இந்து ஆலயங்களை மீளக்கட்டியெழுப்புவதறகு இந்து கலாசார அமைச்சரால் மிக விரைவில் நிதி வழங்கப்படவுள்ளதாக இந்து கலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-19)

# மனிதனின் வயிற்றில் 15 அடி நீள நாடாப்புழு

(கொழும்பு)

நபர் ஒருவரின் உடலிலிருந்து 15 அடி நீளமான நாடாப்புழு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சோதனை செய்த போதே மியன்மார் பிரஜை ஒருவரின் உடலிலிருந்து இந்த நாடாப்புழு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புழுவை உடலிலிருந்து அகற்றுவதற்கு வைத்தியர்கள பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது ஒருவகையான நோயாகும். இதனைக்கட்டுப்படுததுவதற்கு நடவடிக்கை.மேற்கொளளப்பட்டு வருகின்றன. (ற-8)

# மட்டு.கருவேப்பங்கேணியில் படையினர் தீவிர விசாரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கருவேப்பங்கேணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர் கடந்த 30ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அப் பகுதியிலுள்ள பொதுமக்களை படையினர் துருவித் துருவி விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டியில் வைத்து மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்தே இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களை அடையாளம் காட்ட முடியாதா என சில பொது மக்களைப் படையினர் வழிமறித்து விசாரணை மேற்கொண்டனர். அத்துடன், இரவு நேரத்திலும் இராணுவத்தினரின் நடமாட்டங்கள் அதிகம் காணப்படுவதாகவும், இதனால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும தெரியவருகிறது.

கருவேப்பங்கேணியை அண்டியுள்ள ஜெயந்திபுரம், இருதயபுரம்,ஊரணி போன்ற இடங்களிலும் இரவுவேளையில திடீர் இராணுவ சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ஈ)

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி மருந்து வழங்கும் நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு உட்பட்ட, நிலையங்களின் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கீழ் வரும் இடங்களில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை ஒரு வயது தொடக்கம் 10 வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் இரண்டு சுற்றுக்களில் வழங்கப்படவுள்ளது.

முதல் சுற்று இன்றும், இரண்டாம் சுற்று எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமையும் வழங்கப்படுமென யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - சாவகச்சேரி இடங்கள், நிலையம் முறையே

நாவற்குழி - (கு.சு.சே.உ.பணிமனை, தச்சன்தோப்பு சி.நிலையம்), கைதடி வடக்கு- (அம்பிகை மாதர் சங்கம்), கைதடி தெற்கு- (மத்திய மருந்தகம் கைதடி), மட்டுவில் வடக்கு- (வேற்பிள்ளை வாசிகசாலை), மட்டுவில் தெற்கு - (ஆரம்ப சுகாதார நிலையம்), சரசாலை-(கிராமோதைய நிலையம்), மந்துவில்- (ஆரம்ப சுகாதார நிலையம்), நுணாவில் - (பொதுநூலகம்), கல்வயல்-(கு.சு.சே.உ.அலுவலகம்); நகரசபை - (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), சங்கத்தானை - (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), கச்சாய்-(ஆரம்ப சுகாதார நிலையம்), அல்லாரை-(வெள்ளாம் போக்கட்டி), மீசாலை வடக்கு -(புத்தூர் சந்தி), கொடிகாமம் -(கச்சாய் கிராமோதைய நிலையம்), உசன் -(ஆரம்ப சுகாதார நிலையம், தவசிக்குளம் பகல் பராமரிப்பு நிலையம்), மிருசுவில்- (ம.ம.ம.ம.கொடிகாமம்), வரணி தெற்கு - (குடமியன் வாசிகசாலை), வரணி வடக்கு -(ம.ம.ம.ம.வரணி), வரணி மத்தி -(ம.ம.ம.ம.வரணி),

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - தெல்லிப்பழை இடங்கள், நிலையம் முறையே

பன்னாலை- (ம.ம.ம.ம அளவெட்டி), அளவெட்டி தெற்கு- (அளவெட்டி பன்னாலை), தெல்லிப்பழை -(மா.வை.தெல்லிப்பழை), மல்லாகம் மத்தி, மல்லாகம் வடக்கு-(மல்லாகம்), ஏழாலை தெற்கு- (மத்திய மருந்தகம்), ஏழாலை வடக்கு- (ஏழாலை தெற்கு மத்திய மருந்தகம்), வசாவிளான் - (புன்னாலைக்கட்டுவன்), குப்பிளான்- (வசாவிளான்), புன்னாலைக்கட்டுவன் -(இளவாலை), சுன்னாகம் தெற்கு - ( மத்திய மருந்தகம்), சுன்னாகம் வடக்கு -(சுன்னாகம்), கந்தரோடை-(கந்தரோடை), தாவடி - (தாவடி ஆரம்ப சுகாதார நிலையம்), இணுவில் வடக்கு-(மத்திய மருந்தகம் இணுவில்), இணுவில் தெற்கு -(தாவடி), உடுவில் தெற்கு -(மத்திய மருந்தகம் உடுவில்), உடுவில் வடக்கு-(மல்லாகம்), உடுவில்- (ஆரம்ப சுகாதார நிலையம் சுன்னாகம்).

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - மானிப்பாய் இடங்கள், நிலையம் முறையே

சங்கானை-(சுற்றயல்கூறு), பண்ணாகம்-(ஆரம்ப சுகாதார நிலையம்), தொல்புரம் -(மத்திய மருந்தகம்), வட்டுக்கோட்டை -(மத்திய மருந்தகம்), வட்டுக்கோட்டை -(கிராமிய வைத்தியசாலை வை.எம்.சீ.ஏ. நவாலி), மூளாய் -(ஆரம்ப சுகாதார நிலையம் ம.ம.ம.ம.மானிப்பாய்), சாவற்காடு-(ஆரம்ப சுகாதார நிலையம்), கட்டுடை-(கிராம அபிவிருத்திச் சபை), ஆனைக்கோட்டை-(கிராம அபிவிருத்திச்சபை), ஆலங்குளாய் -(கிராமோதய சென்ரர்), பிரான்பற்று -(கிராமோதய சென்ரர்), இளவாலை-(மத்திய மருந்தகம்), பண்டத்தரிப்பு-(கிராமிய வைத்தியசாலை), சுதுமலை-(கிராமோதய சென்ரர்).

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்றுறை இடங்கள், நிலையம் முறையே

ஊர்காவற்றுறை-(மாவட்ட வைத்தியசாலை), புளியங்கூடல்-(ஆரம்ப சுகாதார நிலையம்), நாவாந்துறை-(ஆரம்ப சுகாதார நிலையம்), காரைநகர் -(சுற்றயல்கூறு), காரைநகர் -(வாரிவர் வளவு), அனலைதீவு-(சுற்றயல்கூறு), எழுவைதீவு -(ஆரம்ப சுகாதார நிலையம்), மண்டைதீவு -(ஆரம்ப சுகாதார நிலையம்), அல்லைப்பிட்டி (ஆரம்ப சுகாதார நிலையம்), வேலணை- (கிராமிய வைத்தியசாலை), சரவணை-(ஆரம்ப சுகாதார நிலையம்), புங்குடுதீவு -(மாவட்ட வைத்தியசாலை), நயினாதீவு -(சுற்றயல்கூறு), நெடுந்தீவு -(மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு வடக்கு).

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - பருத்தித்துறை இடங்கள், நிலையம் முறையே

கற்கோவளம்-(கற்கோவளம் மாதனை), பருத்தித்துறை கிழக்கு-(4 ஆம் குறுக்குத் தெரு), பருத்தித்துறை மேற்கு (சிகிச்சை நிலையம்), புலோலி மேற்கு -(கதிரவேல்பிள்ளை வாசிகசாலை), அல்வாய் வடக்கு-(ஆரம்ப சுகாதார நிலையம் வியாபாரி மூலை), வல்வெட்டித்துறை-(மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை), கம்பர்மலை-(கலைவாணி சனசமூக நிலையம்), தொண்டைமானாறு-(ஆரம்ப சுகாதார நிலையம் தொண்டைமானாறு), உடுப்பிட்டி-(உடுப்பிட்டி வாசிகசாலை), இமையாணன் -(இமையாணன் மாதர் சங்கம்), அல்வாய் மேற்கு-(அல்வாய் மேற்கு சிகிச்சா நிலையம்), அல்வாய் தெற்கு-(அல்வாய் கிராமோதய சென்ரர்), வதிரி -(வதிரி சிகிச்சை நிலையம்), கரணவாய் வடக்கு -(ஆரம்ப சுகாதார நிலையம் கொற்றாவத்தை உடுப்பிட்டி கிராமோதய சென்ரர்), புலோலி தெற்கு துன்னாலை வடக்கு -(சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), சோளங்கன்-(சோளங்கன் சனசமூக நிலையம்), கரணவாய் தெற்கு-(மணியகாரர் தோட்டம்), துன்னாலை தெற்கு -(கட்டைவேலி சிகிச்சா நிலையம்), கரவெட்டி தெற்கு-(விக்னேஸ்வரா), கரவெட்டி மேற்கு-(ம.ம.ம.ம.கரவெட்டி), அம்பன்-(ம.ம.ம.ம. அம்பன் மணற்காடு), கப்பூது - (கப்பூது).

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - மருதங்கேணி இடங்கள், நிலையம் முறையே

கட்டைக்காடு-(கட்டைக்காடு பொதுமண்டபம்), வெற்றிலைக்கேணி-(வெற்றிலைக்கேணிப் பாடசாலை), உடுத்துறை-(திலீபன் மருத்துவமனை ஆழியவளை), செம்பியன்பற்று- (கிராமிய வைத்தியசாலை, மருதங்கேணி மாமுனை),

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - கோப்பாய் இடங்கள், நிலையம் முறையே

இத்திக்கலட்டி-(கிராம அபிவிருத்திச் சங்கம்), அச்சுவேலி-(சுற்றயல்கூறு), புத்தூர்-(மத்திய மருந்தகம்), வாதரவத்தை-(ஆரம்ப சுகாதார நிலையம்), சிறுப்பிட்டி-(கிராம அபிவிருத்திச் சங்கம்), நீர்வேலி-(கிராம அபிவிருத்திச் சங்கம்), அச்சுவேலி -(ஆரம்ப சுகாதார நிலையம்), ஊரெழு-(ஆரம்ப சுகாதார நிலையம்), உரும்பிராய்-(மத்திய மருந்தகம்), கோப்பாய்-(சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), இருபாலை-(ஆரம்ப சுகாதார நிலையம்), கட்டப்பிராய்-(கிராம அபிவிருத்திச் சங்கம்), திருநெல்வேலி-(கலாமன்றம் திருநெல்வேலி),கோண்டாவில் -(மத்திய மருந்தகமும மகப்பேற்று நிலையமும்), கொக்குவில்-(மத்திய மருந்தகம்), கொக்குவில் வடக்கு-(கிராம அபிவிருத்திச் சங்கம்), அரியாலை-(கிராம அபிவிருத்திச் சங்கம்).

### யாழ்.மாநகர சபை நிலையங்கள்

சுவாமியான் வீதி சிகிச்சை நிலையம், பாசையூர் மகப்பேற்று நிலையம், குருநகர் சி.டி.எம்.ஏச்., அரியாலை மகப்பேற்று நிலையம், நல்லூர் சிகிச்சை நிலையம், கந்தர்மடம் சிகிச்சை நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், நாவலர் வீதி மகப்பேற்று நிலையம், யூபிலி மகப்பேற்று நிலையம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம். (ற)

## யாழ்.பல்கலை கல்விசாரா ஊழியர் இருமணி நேர மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் யாழ்.பல்கலைக்கழக பிரதான வாசலின் முன்பாக 2 மணிநேர மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கடநத 28ஆம் திகதியில் இருந்து அனைத்துப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விசாரா. ஊழியர்களதும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதேவேளை, இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாகவே நேற்றுமுன்தினம் காலை 9மணி தொடக்கம் 11மணி வரை யாழ்.பல்கலைக்கழக பிரதான வாசலை மறித்து தமது கோரிக்கைகள அடங்கிய பதாதைகளைத் தாங்கிய வண்ணம் 100ற்கும் மேற்பட்ட கல்விசாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களின் சம்பள முரண்பாடுகள் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சீர்செய்யப்பட்டு உரிய சம்பளத்திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படல் வேணடும். 09.03.1997 ற்குப பின்னர் பல்கலைக்கழக சேவையில் இணைந்துகொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் மாதாந்த இழப்பீட்டுப்படியை அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய வழங்கப்படல் வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தமது கோரிக்கைகளுக்கு உறுதியான முடிவு கிடைக்கும வரை தாம் தொடர் வேலை நிறுதத்தில் ஈடுபடப் போவதாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (ற-19)

## கப்பல் கப்டனை விடுவிக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

சோமாலியாவில் கடற்கொள்ளையாகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பல் கப்டனான செல்லத்துரை மகாலிங்கம் பாதுகாப்பாக இருப்பதாக வெளிவிவகார அமைசசு வெளியிட்டுள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடுத்து வைக்கப்பட்டுள்ள முத்துலிங்கத்துடன் கடந்த செவ்வாயக்கிழமை குறித்த கப்பல் நிறுவனமான மட்டாகுவின் பிரதிநிதி தொடர்பு கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதாக மகாலிங்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மகாலிங்கத்தின் செய்தியை அவரது குடும்பத்தவர்களுக்கு உறவினர்களின் ஊடாக அறிவித்துள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர்ந்தும் மகாலிங்கத்தை விடுவிக்கும் முயற்சிகள் கென்ய தூதுவராலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 18 கோடி 40இலட்சம் செலவில் 15ஆயிரம் கிராமிய அபி.திட்டங்கள்

(கொழும்பு)

நாட்டின் கிராமப்புற பிரதேசங்களில் 15 ஆயிரம் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இம்மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்திட்ட அதிகாரி குமார் எதிரிமான தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக திறைசேரி 18 கோடியே 40 இலட்சம ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 15ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 22 மாவட்டங்களில் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான பிரதான வைபவம் அன்றைய தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மாத்தளையில் இடம்பெறவுள்ளது. (அ-9)

## கிராம அபி.திணைக்கள மாகாணமட்ட தையல்,மனையியல் கண்காட்சி யாழில்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற மாகாணமட்ட தையல், மனையியல் கண்காட்சி இந்த வருடம் முதன் முறையாக யாழ்.மாவட்டத்திலும் நடத்தப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட தையல், மனையியல் காட்சிப் பொருட்கள் இவ் மாகாண மட்ட தையல், மனையியல் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

இரண்டு நாட்கள் நடைபெறும் இவ மாகாண மட்ட தையல், மனையியல் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-19)

## சிறைச்சாலைக்குள் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக நீதிய மைச்சர் டபிள்யு.டி.வி.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் நடைபெற்ற சம்பவங்களினால் சிறைக் கைதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்த நீதியமைச்சர், அண்மைக்காலச் சம்பவங்களுடன் தொடர்புடைய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,

சிறைச்சாலைகளுக்குள் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நவீன தொழில்நுட்ப ரீதியிலான கருவிகள் பொருத்தப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கிராம அலுவலர் பதவி உயர்வுக்கு போட்டிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

தரம் II கிராம அலுவலர்களை திறமையின் அடிப்படையிலும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையிலும் தரம் Iக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு முனனர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கிராம அலுவலர் அதிஉயர் தரத்திற்குப் பதவி உயர்த்தும் பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். (து-29)

# விவாகரத்து வழக்கும் அதன் தாற்பரியங்களும்

1

திருமணம் மீளமைக்கப்பட முடியாத ளவு முறிவடையின் இலங்கை மாவட்ட நீதிமன்றத்தில் (District Court) கணவன் (Husband)அல்லது மனைவி( Wife) வழக்கிடலாம்.

இதற்கு திருமணம் நடைபெற்றதா என்பது முக்கியமானது. திருமணமானது I பதிவுத்திருமணம்( Registration Marriage) II .சமயாசாரப்படியான திருமணம (Customary Marriage) இது ஒரு மதகுரு முன் தாலிகட்டியோ அல்லது கட்டாமலோ இடமபெறலாம். III. கூடி வாழுதல் (Co-Hapitation) என மூன்று (03) வகையாக இடம்பெறலாம்.

விவாகரத்து வழக்கிற்கான புதிய சட்ட ஏற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். 1.திருமணம் மீளமைக்கப்பட முடியாத நிலையில் மீண்டும் மீளமைக்கப்படக் கூடிய நிலைமை காணப்படாதவிடத்து விவாகரத்து வழங்கப்படலாம்.

2.மீளமைக்கப்பட முடியாத நிலைமைக்கு பின்வரும் காரணிகளும் அடிப்படையாகும்.

(a)கணவன் அல்லது மனைவி அவர்கள் தவிர்ந்த வேறு நபருடன் சோர வாழ்க்கை வாழுதல். இதனால் திருமண உறவை தொடர முடியாது இருத்தல் (adultry). இங்கு சோரத்தை நிரூபிக்க வேண்டுமானால் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் எண்பிக்க வேண்டும். (Beyond the reasonable doubt-100%) (அதாவது குற்றவியல் வழக்கைப் போன்று ஆகும்).

(b) கணவன் அல்லது மனைவி வன்மமாகத் திருமண இல்லத்தை விட்டு வெளியேறல் அல்லது வெளியேற்றப்படல் (Malicious desertion or constructive malicious desertion).

(c) வழக்குத் தாக்கல் செய்த திகதியில் இருந்து ஒரு(01) வருடத்திற்கு முன் நியாயமான காரணங்களுக்காக பிரிந்திருந்தால் விவாகரத்து வழங்கப்படலாம். இது தனிப்பட்ட காரணியாக அமையமாட்டாது.

(d) கணவன் அல்லது மனைவி வேண்டுமென்று நியாயமின்றி கொடூரம் புரிதல். இதுவும் தனிப்பட்ட காரணியாக நினைத்து விவாகரத்து வழங்கமுடியாது. எனினும், சூழ் நிலைகளைக் கொண்டு இதனையும் ஒரு காரணமாக ஏற்கலாம்.

விவாகரத்தின்போது நீதிமன்றில் தீர்மானிக்கப்படும் விடயங்கள்:

i.குற்றமுள்ள வாழ்க்கைத் துணையின் நடத்தையை ஒழுங்குபடுத்தி கணவன் மனைவியை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுதல். இதற்காகப் பிரதேச செயலகம் ஊடாக குடும்பத் திட்ட ஆலோசகர் (Family counseller) நியமிக்கப்பட்டு நீதிமன்றம் ஊடாகச் செயற்படுத்தப்படுகிறது;

ii. நீதிமன்ற தீர்ப்பு வெளிவரும் வரை திருமண இல்லத்தில் இருந்து ஒருவரை வெளியேற்றல்;

iii. பிள்ளைகளது காப்பாண்மை (Adoption) -இது இருவரும் ஒற்றுமையாக இருக்கும் போது சட்டப்படி நீதிமன்றம் மூலம் பிள்ளைகளைத் தத்து எடுத்திருந்தால் அப் பிள்ளைகள் உட்பட சகல பிள்ளைகளினதும் பாதுகாப்பு (Custody), உரிமைகள் (Rights), சேர்வுகள் (Access) என்பவற்றைத் தீர்மானித்தல்;

iv. பிள்ளைகளின் பராமரிப்பு (Maintanance), கல்வி (Education) என்பவற்றை நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் குடும்ப திட்டமையங்களூடாகச் செயற்படுத்தல்;

v. குற்றமற்ற வாழ்க்கைத் துணைக்கு வழங்க வேண்டிய காப்புறுதிப் பணத்தை (Insurance) தீர்மானித்தல். இது பிள்ளைகளுக்கும் பொருந்தும்;

vi. கணவன் மனைவி இருவருக்கும் பொதுவான ஆதனங்களில் மட்டும் ஓர் உடன்பாட்டுக்கு வரல்.இதில் தேசவழமை ஆதன கோட்பாடுகள் கவனிக்கப்படவேண்டும்;

vii. சீதனமாகப் பணம், சொத்துக்கள் வழங்கப்பட்டிருப்பின் அவை கையாளப்பட வேண்டிய முறைகளைக் கடைப்பிடித்துத் தீர்மானித்தல்;

viii. வழக்கு முடிவடையும் வரை தற்காலிக பிரிமனைப் பணம் (பேணறவு - தற்காலிகம்) (Alimony pendente Lite), நிரந்தரப் பிரிமனைப் பணம் (நிரந்தரப் பேணறவு) (Permanent Alimony) என்பவற்றைத் தீர்மானித்தல் - இங்கு இவை செலுதப்படாத போது அதற்காகக் குற்றம் உள்ள வாழ்க்கைத் துணையின் ஆதனத்தை ஈடாகக் கட்டுப்படுத்தி (Mortgage) வாடகை ஊக்குவிப்பினைக் குற்றமற்ற வாழ்க்கைத் துணைக்கும், பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுத்தல்;

ix. குற்றமற்ற வாழ்க்கைத் துணை பிள்ளைகள் என்பவற்றின் வசிப்பிடத்தைத் தீர்மானித்தல் (Dwelling House Order);

x. சம்பள நடுக்கட்டல்: குற்றமற்ற வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளைகளுக்கும் பராமரிப்பு ஏற்பாடுகள் மூலமாகத் தீர்மானித்தல்.

இவற்றிற்கான உத்தரவை பெற பிரதாக. மறுமொழி ஊடாக விண்ணப்பிக்கலாம். இங்கு குற்றமற்ற வாழ்க்கைத் துணைக்கே வழக்கிடும் சட்ட உரிமை உண்டு. மேற் கூறப்பட்ட நீதிமன்றத் தீர்மானங்களை நீதிமன்றம் எப்போதும் இல்லாமல் செய்யலாம், திருத்தலாம், ஒத்தி வைக்கலாம், மீளபரிசீலனை செய்து புதிய உத்தரவை இட்லாம்.

இவை இடைக்காலக் கட்டளைகள் (Interim orders) ஆகும். முற்றான தீர்வைப் பதிந்து மேல் முறையீட்டுக் காலம் முடிவடைந்த பிறகு பிள்ளைகளின் தனிப்பட்ட விடயங்கள் மட்டுமே பிள்ளை 18 வயதை அடையும் வரை தீர்மானிக்கும் சட்ட அதிகாரம் நீதிமன்றுக்கு உண்டு. அதன் பிறகு பிள்ளைகள் தம்மைப் பராமரிக்க இயலாத விடத்துத் தான் நேரடியாக அல்லது தன்னைச் சார்ந்தவர்கள் மூலமாக பராமரிப்புச் சட்டப்படி (Maintenance act - No .37 of 1999) தாபரிப்பு வழக்கொன்றை நீதவான நீதிமன்றத்தில் (Magistrate Court) தாக்கல செய்யவேண்டும்.

18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் விடயத்தில் விவாகரத்து வழக்கின்போது எட்டு(08) வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளைத் தாயிடமும் எட்டு (08) வயதுக்கு மேற படின் தந்தையிடமும் பராமரிப்புக்காக நீதிமன்றம் ஒப்படைக்கவேண்டும். எட்டு (08) வயதுக்கு மேற்படின் பிள்ளை தன்னைத் தானே உணரும் நிலை ஏற்படும் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன்போது பிள்ளையின் விருப்பு, வெறுப்புகள் தாய், தந்தையின் நிதி நிலைமை, மறுமணம் புரிந்துள்ளாரா களா? யார் பிள்ளைகளை கூடிய அக்கறையுடன் பராமரிப்பர் என்பவற்றை நீதிமன்றம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இவை பிள்ளைகள் மீது அக்கறை கொண்டோரின் விண்ணப்பத்தின் மீது பரிசீலிக்கப்பட்டு

ச.சிவரூபன் எல்.எல்.பி
சட்டத்தரணி

நீதிமன்றம் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், கட்டளையை/ தீர்ப்பினை (Order / Judgement) வழங்கும். பிள்ளைகளின் பெற்றோர் இருவரும் பிள்ளைகள் 18 வயது வருமுன் இறப்பின் பேரர்களுக்கு இவ்வுரிமை சட்ட ஏற்பாடுகளின் படி சென்றடையும். இங்கு திருமண குற்றங்கள் முதன்மையானது ஆகும். (தொடரும்)

## இராணுவ இரகசியங்களைப் பெற வகுக்கப்பட்ட திட்டம் முறியடிப்பு

(கொழும்பு)

லெப்.கேணல் நிசாம் முத்தலிப் கொலைச் சந்தேக நபர்களிடமிருந்து சிறிலங்கா இராணுவ ஆட்லறி பிரிவு இரகசியங்கள் விற்பனை தொடர்பான பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் மகனான இராணுவ கப்டன் ஒருவருக்கு 50 லட்ச ரூபா பணத்தைக் கொடுத்து இராணுவத்தின் ஆட்லெறி பிரிவின் அனைத்து இரக்சியங்களும் அடங்கிய அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வகுக்கப்பட்ட திட்டம் முத்தலிப் கொலைச் சந்தேக நபர்களின் கைதினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

முத்தலிப்பின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முக்கிய நபரான ராஜன் என்பவரும் அவருக்கு உதவிய சிங்கள வர்த்தகரும் இந்த திட்டத்தின் பின்னணியில் செயற்பட்டுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ராஜன் என்பவரும், சிங்கள வர்த்தகரும் இந்த இராணுவ கப்டனை பல தடவைகள் இரத்மலானை இராணுவ முகாமிற்குச் சென்று சந்தித்துள்ளதாகவும் அங்கு அவர்கள் மது அருந்தியவாறு இந்தத் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2 மாதங்களுக்கு முன்னர் ராஜன் என்பவருக்கும் இந்த இராணுவ கப்டனுக்கும் இடையே 50 லட்ச ரூபா பேரம் பற்றி ஒரு உடன்பாடு காணப்பட்டிருந்ததாகவும் இன்னும் சில தினங்களில் இந்தத் திட்டத்தை செயற்படுத்தத் தீர்மானித்திருந்ததாகவும் ராஜனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இராணுவத்தின் ஆட்லறி பிரிவில் பணியாற்றும் இந்த கப்டன் இரத்மலானை முகாமிலிருந்து சிறிது காலத்திற்கு முன்னரே மின்னேரியா முகாமிற்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

மின்னேரியா முகாமிற்கு ராஜனும் கைது செய்யப்பட்ட சிங்கள வர்த்தகரும் பல தடவைகள் செனறு 50 லட்சம் ரூபா திட்டம் பற்றி இந்த இராணுவ கப்டனுடன் உரையாடியுள்ளனர்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொளவதற்காக இந்த சிங்கள வர்த்தகருக்கு 10 லட்ச ரூபா பணத்தை வழங்கியிருப்பதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

ராஜன் எனப்படும் இந்த புலனாய்வுப்பிரிவு உறுப்பினரும் மற்றும் சில உறுப்பினர்களும் சிறிது காலம கைது செய்யப்பட்ட வர்த்தகரின் இரத்மலானை வீட்டில் தங்கியிருந்து பல தாக்குதல்களுக்குத் திட்டமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜன் வழங்கிய தகவல்களுக்கு அமையவே முத்தலிப்பின் கொலைகளான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 50 லட்ச ரூபா பணத்தை கொடுத்து இன்னும் சிறிது நாட்களில் இந்த இராணுவ கப்டனிடமிருந்து இராணுவத்தின் ஆட்லறிப் பிரிவு பற்றிய தகவல்கள் அனைத்தையும் திரட்ட ஏற்பாடாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சிங்கள வர்த்தகரின் பிஸ்கட் தயாரிப்பு நிலையத்தில் பணிபுரியும் பண்டாரகமவைச் சேர்ந்த பெண்மணியொருவர் கொடுத்த தகவலுக்கு அமையவே சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களைப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

சந்தேக நபர்களுக்குச் சொந்தமான ரி.56 ரக துப்பாக்கிகள் இரண்டு, 9 மில்லிமீற்றர் பிஸ்ரல் ஒன்று, மைக்ரோ பிஸ்டல் ஒன்று உட்பட பல ஆயுதங்களை சிங்கள வர்த்தகரே மறைத்து வைத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(அ-04)

## தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்பட்ட பீடங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டி கடந்த 2,3ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் சு.மோகனதாஸூம் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எஸ்.வரதன் மற்றும் உடற்கல்வி இணைப்பாளர் திருமதி ஜெ.சரவணபவ ஐயர், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி கபுஸ் பரட்ணம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம் 1ஆம் இடத்தினையும், கலைப்பீடம் 2 ஆம் இடத்தினையும், விஞ்ஞானபீடம் 3ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வின் போது 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

பெணகளுக்கான போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டியில் அ.நித்தியாவும, முப்பாய்ச்சல், 400 மீற்றர் தடை தாண்டல் போட்டிகளில் தி.வாசுகியும், உயரம்பாய்தல் போட்டியில் எ.சந்திரிக்காவும், 100 மீற்றர் வேக நடைப்போட்டியில் எஸ்.ராதிகாவும் மற்றும் ஆண்களுக்கான ஈட்டி எறிதல போட்டியில் பி.குகராஜ்ஜும் புதிய சாதனைகளை நிலைநாட்டினர். (அ)

## அம்பாறைக் கரையோர அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவிமூலம் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் செயல்படுத்தப்படும் வடக்கு-கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டததின் கீழ அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் முதல் கட்டமாக 50 இலட்சம் ரூபா செலவிலான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகத் திட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.குருஸ் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் செயல்படுத்தப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்திற்கென்று சமர்ப்பிக்கப்பட்ட 42 வேலைத்திட்டங்களில் 10 வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் குறித்த வேலைத்திட்டங்கள் கரையோரப் பிரதேசத்திலுள்ள 9 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

## பிரதமர் மஹிந்தவின் பாதுகாப்புக் குறித்து புலனாய்வு செய்தவர் மீதே கல்முனையில் சூடு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கிழக்கு மாகாண விஜயத்திற்கான முன்னேற்பாடாக பாதுகாப்பு நிலவரம் குறித்த புலனாய்வுத் தகவல் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் கடந்த புதன்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மஹிந்த இன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவிருந்தார். அவரின் விஜயத்திற்கான முன்னேற்பாடாகப் பாதுகாப்புக் குறித்த புலனாய்வுத் தகவலைப் பெறுவதற்கு புலனாய்வு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களில் இருவர் கல்முனைப் பகுதியில் வைத்து சுடப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் மரணமானார் என அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ச-6)

## பல்கலைத் தொழிற்சங்க ஒருங்கிணைப்புக்குழு கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்க ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை இணக்கமின்றி முடிவடைந்துள்ளது.

பேச்சுவார்த்தை இணக்கமின்றி முடிவடைந்தபோதிலும் அதன் வெற்றியைக் காணக்கூடியதாக இருந்தது எனத் தொழிற்சங்க ஒருங்கிணைப்புக் குழுவின் இணைச் செயலாளர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.


கல்வி நிர்வாகம் மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் கோரிக்கைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டதாக சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

தமக்கு நேர்ந்துள்ள நியாயமற்ற தனமையைக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளமை நிரூபிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மற்றுமொரு சுற்றுப்பேச்சுவார்த்தை நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (அ-9)

# முப்படைக்கான கொள்வனவு வேட்டையில் சிறிலங்கா இராணுவம்!

பிரிட்டனிடம் இருந்து சேர் கலகாட் போர்க்கல தரையிறக்க போர்க்கப் பலைக் கொள்வனவு செய்ய முப்படைத் தளபதி தயா சந்தகிரி பரிந்துரைத் துள்ளார்.



சேர் கலகாட்

சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்ய குறிவைத்திருக்கும் சேர் கலகாட் கப்பலானது 16 போர் டாங்கிகள் அல்லது 33 எட்டு தொன் வாகனங்கள், 62 லான்ட் றோவர்கள் ஆகியவற்றை கப்பலின் மேல் டெக்கில் ஏற்றும் திறன் கொண்டவை.

மேலும் 33 எட்டு தொன் வாகனங்கள் 74 லாண்ட் றோவர்கள், 40 இருபது அடி கொண்டெய்னர்களையும் அதன் வாகன டெக் தாங்கும் திறன் கொண்டது. இதில் மேலும் 27 எட்டு தொன் வாகனங்கள், 59 லாண்ட் றோவர்கள் மற்றும் 30 இருபது அடி கொண்டெய்னர்களையும் ஏற்றலாம்.

பிரிட்டன் சேர் கலகாட் கொள்வனவு தொடர்பில் மேமாதம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிறிலங்கா கடற்படையின் உயர் நிலைக்குழு இது தொடர்பாக பிரிட்டனுக்குச் சென்றது. சிறிலங்கா முப்படைத் தலைமை அதிகாரியும் கடற் படைத் தளபதியுமான தயாசந்தகிரி தலைமையில்



போக்லாண்ட் போரில் தாக்குதலுக் குள்ளாகி எரியும் கலகாட்

ரியர் அட்மிரல் இவான காரியவசம், ரியர் அட்மிரல் ஹர்ஷா மாயா துன்ன, ரியர் அட்மிரல் டொனி அபெசேன ஆகியோர் பிரிட்டன் சென்றவர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இந்தக் குழு பிரிட்டனின் கடற்படையின் தரையிறக்கக் கலங்களைப் பார்வையிட்டது. கடந்த வாரம் பிரிட்டன் கடற் படையின் குழு ஒன்று சிறிலங்காவுக்கு வந்து பிரிட்டனின் 3 தரையிறக்கக் கப் பல்களை விற்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியது.

சேர் கலகாட் - எல் - 3005
சேர் பேர்சிவலே - எல் - 3036
சேர் திரிஸ்ராம் - எல் - 3505

ஆகிய தரையிறக்கக் கலங்களை விற்கவே பிரிட்டன் தரப்பினர் முயற்சி மேற்கொண்டனர்.

இவற்றில் ஒன்றை அதாவது சேர் கலகாட்டை பெற சிறிலங்கா கடற்படை முயல்வதாக தெரிவிக்கப்பட்டது. சேர் கலகாட் கப்பல் பிரிட்டனினால் போக்லாண்ட் போரில் பயன்படுத்தப்பட்டது. அது கடலில் மூழ்கியது.

சேர் திரிஸ்ராம் அப்போரில் சேதமானது. திரிஸ்ராம் பின்னர் மீட்கப்பட்டு பிரிட்டன் தளத்துக்கு கொண்டு வரப் பட்டது. அது திருத்தப்பட்டு 1985இல் மீள சேவையில் அது ஈடுபடுத்தப்பட்டது.

மூழ்கிய சேர் கலகாட் கப்பலைப் போன்று புதிதாக கட்டப்பட்டது. (போக்லாந்து போர் 1982இல் நடைபெற்றது) புதிய சேர் கலகாட் 1987இல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

சேர் பேசிவலே 1968இல் இருந்து சேவையில் உள்ளது.

இவற்றில் சேர் கலகாட்டை வாங்கவே



புதிய கலகாட் தரையிறங்கும் அதன் பின்புறம்

தறபோது சிறிலங்கா படை முயறசிகளை மேற்கொண்டுள்ளது.

சேர்பியாவிடமிருந்து ரஷ்யத் தயாரிப்பு ஏவுகணைக்கப்பல்கள் இரண்டைப் பெறும் முயற்சியிலும் சிறிலங்கா கடற்படை ஈடுபட்டுள்ளது.



கலகாட்டில் இறங்கவல்ல சினூக் ஹெலிகொப்டர்

இதன் பெறுமதி 2.45 பில்லியன் ரூபாக்கள். இதற்காக சிறிலங்கா கடற்படையின் ஒரு குழு ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் சேர்பியாவின் சராகோவா செவிக தளத்துக்கு சென்றுள்ளது.

இந்த ஏவுகணைக்கப்பல் தரையிலிருந்து தரையைத் தாக்கும் ஏவுகணை, விமானத்தைத் தாக்கும் ஏவுகணை, நீர் மூழ்கிகளைத் தாக்கும் ஏவுகணைகளைக் கொண்டது.



கலகாட்டில் இறங்கும் வெஸ்ட்லான்ட் சீகிங் ஹெலிகொப்டர்

சேர்பியா யூகோஸ்லாவியாவின் ஒரு குடியரசு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட உருகுவே நாட்டிடமிருந்து விஜிலன்ட் கிளாஸ் வகை அதிவேக தாக்குதல் படகுகள் மூன்றை கொள்வனவு செய்யவும் சிறிலங்கா கடற்படை முயல்கின்றது.

இவை 1980இல் பிரான்சில் கட்டப்பட்டு 1981இல் உருகுவேயிடம் கொடுக்கப்பட்டவையாகும்.

சிறிலங்கா கடற்படையின் உயர்நிலைக் குழு ஒன்று இவற்றை பார்வையிட உருகுவேயின் மொண்டிவீடியோவுகசு சென்றுள்ளது.

உருகுவேயின் கடற்கலங்கள் பல நவீன வசதிகளைக் கொண்டவையாகவும இருக்கின்றன.

பிரிட்டனிடமிருந்து ஒரு தரையிறக்கக கப்பல், சேர்பியாவிடமிருந்து இரு ஏவுகணைக் கப்பல்கள் என்பவற்றை சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்வதற்கான செலவில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு புனர்வாழ்வளிக்க முடி




யும் என்றும், மின்சார சபைக்கு மானியமளிக்க முடியும் என்றும் கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இஸ்ரேலிடமிருந்து கொள்வனவான ஏவுகணைக்கப்பல்கள் சிறிலங்கா கடற்படையிடம் இருக்கின்றன. 20 ஆண்டு காலம் பழைமையான இவற்றில் ஏவுகணை செலுத்திகள் பழுதடைந்தவையாக இருக்கின்றன.

இவை 3ஆம் ஈழப் போர்க்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டன. இவை கொள்வனவு செய்யப்பட்டதில் மோசடிகள் நடந்ததாக குற்றச்சாட்டு உள்ளது. இன்றும் இவை கொழும்புத் துறைமுகக் கடற்படைத் தளத்தில் நிற்கின்றன. இதுவரை இவை ஒரு ஏவுகணையைக்கூட ஏவவில்லை. இதைவிட இந்தியாவிடமிருந்து சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்த சுகன்யா கிளாஸ் வகை கப்பலான எஸ்.எல்.என். எஸ் சயுர என்ற உலங்கு வானூர்தி தாங்கிக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த போபர்ஸ் பீரங்கி இப்போது அமெரிக்காவிடமிருந்து பெற்ற கரேஜஸ் ஆள் கடற கண்காணிப்புக் கப்பலில் பொருத்தப்பட்டு விட்டது.

இப்போது கரேஜுக்கு எஸ்.எல்.என்.எஸ். சமுத்ரா என்ற பெயர் இடப்பட்டுள்ளது.



பேர்சிவலே கப்பல்

இதை அமெரிக்கா அன்பளிப்பாக கொடுத்தாலும அதன் புனரமைப்புக்கு 600 மில்லியன் ரூபாக்களை அமெரிக்காவுக்கு சிறிலங்கா கடற்படை கொடுத்துள்ளது. போபோஸ் பீரங்கி களற்றப்பட்டு நிராயுதபாணியாக்கப்பட்டுள்ள சயுர ஆள் கடற் கண்காணிப்புக் கப்பலை இனி சிறிலங்கா கடற்படை என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

ஏற்கனவே சிறிலங்கா கடற்படையிடம சாதாரண தரையிறக்கக் கப்பல்கள, இஸ்ரேல் தயாரிப்பு டோறா பீரங்கிக் கலங்கள், சீனத் தயாரிப்புப் பீரங்கிப் படகுகள், கொழும்பு டொக்யாட் கட்டுமான ஆழமற்ற கடல் பயணத்துக்கான வோட்டர் ஜெற் படகுகள், ஏவுகணைக் கப்பல்கள், கட்டளைக் கப்பல்கள் என்பன இருக்கின்றன.

இவற்றில் சகல வகைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதில் சிறிலங்கா கடற்படை இழந்திருக்கும் கடற்கலங்களுக்கு மாற்றீடான கலங்களை புதிதாகக் கொள்வனவு செய்யவில்லை. பதிலாக புதிதாக நவீனமான கலங்களை கொள்வனவு செய்யமுனைகிறது. இதுதான் இப்பொழுதுள்ள அமைதிக்காலத்தில் கேள்வியை எழுப்பியுள்ளன.

**சேர் கலகாட் -3005**

பணியில் - 1987 நவம்பர் 25
எடை - 8,751 தொன்
நீளம் - 141
அகலம் - 19.5 மீற்றர்
இயந்திரம் - 4,600 குதிரைவலு
வேகம் - 14நொட்
கூடுதல் வேகம் - 17 நொட்



திரிஸ்ராம் கப்பல்

ஆயுதம் - 20மி.மீ ஒலிகன் பீரங்கி -2
76 மி.மீ இயந்திரத் துப்பாக்கி -2


வானூர்தி தரையிறக்கவலு - வெஸட்லானட் சீகிங் ஹெலிகொப்டர், சி.எச் 47 சிறிய சினூக் ஹெலிகொப்டர்.

வெஸ்ட்லான்ட் சீகிங் ஹெலிகொப்டர் இது அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உற்பத்தி செய்யப்படுவது பிரிட்டன் கடற்படையில் பயன் படுத்தப்பட்டு வருவது.

அவஸ்திரேலியா, பெல்ஜியம், பாகிஸ்தான், இந்தியா, எகிப்து, ஜேர்மனி, நோர்வே நாடுகளிலும் கடற்படையில் இவை உள்ளன.

ஆட்கள் - 3 பேர்
நீளம் - 16.69 மீற்றர்
உயரம் - 5.20 மீற்றர்
கூடுதல் காவுபாரம்- 9707 கிலோ
வேகம் - மணிக்கு 144 கி.மீ

சி.எச - 47 சிறிய சினூக் ஹெலிகொப்டர்



போக்லாண்ட் போரில் தாக்குதலுக் குள்ளாகி எரியும் கலகாட்

வேகம் - மணிக்கு 173 மைல்கள்
பணி - துருப்புகளை காவுதல், ஆட்டிலறி பீரங்கிகள் உள்ளிட்ட கலங்களை கள முனைகளுக்கு கொண்டு செல்லுதல்.
16 நாடுகள் பயன்படுத்துகின்றன.
ஆயுதம் M60 இயந்திரத் துப்பாக்கிகள் -02

இதற்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்துகிறார்கள் என்ற பிரசாரம் சிறிலங்கா அரசால் பலமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் சிறிலங்கா படைகள் பலமாக அதிநவீன போர்க் கலங்களை கொள்வனவு செய்து தம்மைப் பலப்படுத்துகின்றது.

செக் தயாரிப்பு ரி-55 வகை டாங்கிகளை 98 என்ற எண்ணிக்கையில் கொள்வனவு செய்ய சிறிலங்கா இராணுவத்துக்கு சிறிலங்கா அரசு ஒப்புதல் அளித்துள்ளது.


ரஷ்யத் தயாரிப்பு எம் ஐ-35 வகை பீரங்கி பொருத்திய ஹெலிகொப்டர்

## இணையப் பார்வை

களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்துள்ளது.

கடந்த ஈழப்போர் காலங்களில் சிறிலங்கா விமானப்படையால் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த தாக்குதல் விமானங்களான சீனத் தயரிப்பு எப்-7 உக்ரெய்ன் தயாரிப்பு அன்ரனோவ் விமானங்கள், பிரிட்டன் தயாரிப்பு ஹெர்குலிஸ் என்பன திருத்தத்துக்குட்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இப்படியாக சிறிலங்காவின் முப்படைகளும் வலுவாகிவிட்டன. இப்பொழுது அடிக்கடி வெளிநாட்டு போரியல் நிபுணர்களும் சிறிலங்கா வந்து தமிழர் தாயகப் படைத்தளங்களுக்கு பயணம் செய்து போகின்றனர். இதுவும் முக்கியமாக பார்க்கப்படவேண்டியதாகும்.



புதிய சேர் கலகாட்

இதையும் விட சிறிலங்கா - இந்திய பாதுகாப்பு உடன்பாடும் இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் இதற்கு இந்தியாவில் தமிழ் கட்சிகளின் கடும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு என்பது சமாதான நடவடிக்கைகளுக்கான சமிக்ஞை என்று உலகம் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில்தான் சிறிலங்கா அரசு, தனது இராணுவத்திற்காக போர்க் கலங்கள் கொள்வனவுகளையும் வெகு தீவிரமாக நடத்துகின்றது என்பதையும் சர்வதேச சமூகம் உணர வேண்டியது அவசியம். □

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு தவறாது தடுப்பு மருந்து வழங்குவோம்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க் கான தடுப்பு மருந்தேற்றல் யாழ்.மாவட் டத்தில் இம் மாதம் நடைமுறைப்படுதத தப் படுகிறது. இது இன்று சனிக்கிழமை மற் றும 23ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் பொதுவாக அமுல்படுத்தப் படுகின்றது: ஒரு வயது தொடக்கம் 10 (பத்து) வயது வரையான சகல பிள்ளைகட்கும வழங்கபபடவிருக்கிறது. முதல் தடவையாக தடுப்பு மருந்து பெறுவோர் இரண்டுகட்ட மாக 1-4 வார இடைவெளியில் தடுப்பூசி யைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இலங்கையில் நோயின் தாக்கம்**

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஜப்பா னிய 'என்செபலைட்டிஸ்' அல்லது மூளை வீக்கம் எனும் பெயர்களால் அழைக்கப்படு கிறது. இந் நோய்க்கு பொதுவாக ஜப்பான் என்னும் அடைமொழி வழங்கக் காரணம் 1935 இல் ஜப்பானிய நோயாளியின் மூளையில இருந்து வைரசு இனம் காணப்பட்ட படியி னாலாகும். இலங்கையில் 60ஆம் தசாப் தத்தில் இது இருந்ததாக நம்பப்படுகிறது.

ஆனால், 1968இல் தான் குறிப்பிட்ட வைரசுடன் இலங்கையில் நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். பின்னர் 1980களில இலங்கையில் சுகாதாரப் பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டது. 1986/1987 இல் தொற்று நோயாக் உருவெடுத்தது. இலங்கையில் அனுராதபுரம், பொலனறுவை பகுதிகளில் தீவிரமாகப் பரவி 385 நோயாளா களையும் 64 இறப்புக்களையும் ஏற்படுத் தியது. பின்னா 1987/88 நாட்டின் வேறு பல பகுதிகளுக்கும் பரவி 812 நோயாளாகளை யும் 192 இறப்புக்களையும் ஏற்படுத்தியது. தற்பொழுது இலங்கையில் பல பாகங்களிலும் வருட இறுதியில் காய்ச்சலுடனும் தலை வலியுடனும் அதிக நோயாளர்கள் வைத்திய சாலை செல்கின்றனர். இவை ஜபபானிய மூளைக்காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிக ளாகும்.

ஆரம்பத்தில் காய்ச்சல், நடுக்கம், தலை யிடி, ஓங்காளம், வாந்தி போன்ற அறிகுறி களுடன் காணப்படும். பலர் குணமடைந்து விடுவார்கள். சிலரில் நோய் அடுத்த கட் டத்தை அடையும். இது மூளை தாக்கும நிலையாகும். உடல் நோய், மாறாட்டம், அங் கலாய்ப்பு, அறிவு கெடட நிலை, மனக் குழப்பம், வலிப்பு, தசை நார் இறுக்கம், நீர் இழப்பு, நிறை குறைதல், பேச்சில் வித் தியாசம் போன்ற அறிகுறிகளுடன் குண மடையலாம் அல்லது நிரந்தர ஊன நிலை யேற்படலாம். மரணமும் சம்பவிக்கலாம்.

உடலில் வைரசு சென்றால் எல்லோருக் கும் மூளைக்குச் செல்வதில்லை. தரவுகளின் கணிப்பீட்டின் படி 200 தொடக்கம் 1000 பேரு க்கு குருதியினூடாக உடலில் வைரசு சென்று அதில் ஒருவருக்கு மட்டுமே மூளைக்கு பாதி ப்பு ஏற்படுகின்றது. மூளையில் தாக்க நிலை அறிகுறிகள் தென்பட்டவர்களில் 25 வீத மானோர் மரணமடைகின்றனர். 50 வீதமா னோருக்கு மூளை பாதிக்கப்பட்டு உள நோய் அல்லது நரம்பு பாதிப்பினால் கை, கால இயங்காத நிலை போன்ற நிரந்தர ஊன நிலைகளைத் தோற்றுவிக்கின்றன.

**நுளம்பு மூலம கடத்தப்படும் வைரசு நோய்**

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நுளம்பு மூலம் பரப்பப்படும் வைரசு நோயாகும். இலங்கையில் 'கியூலெக்ஸ், டிரைடை டியோ ரிஸ்காஸ்', 'கியூலெக்ஸ் ஜெலி டெக்ஸ்'எனும் இனத்தைச் சார்ந்த பெண் நுளம் புகளால் இது பரப்பப்படுகின்றன. இவை பெரும்பாலும் மிருக குருதியை விரும்பி எடுப்பவை. மனித குருதியையும் எடுக்கும்.

இதன் சில இயல்புகள் வழமையாகப் பயன்படுத்தும் நுளம்பு அழித்தல் முறை க்கு சவாலாக அமைகின்றன. ஏனெனில், அதன் வாழ்விடம் வீட்டிற்கு வெளியில் இருப் பதால் வீட்டிற்கு இரசாயன மருந்துகளை விசுறுவதால் பயன் அளிக்காது போகிறது. மற்றும் வயல் போன்ற மனிதன்-பாவிக்கக் கூடிய நீர் நிலைகளில் முட்டையிடுவதால் குடம்பி நிலையில் அளித்தலும் சாத்திய மில்லை. மற்றும் 1-2 கி.மீற்றர் நீண்ட பறப் புத தூரத்தைக் கொண்டவை போன்ற கார ணங்களால் பாரிய அளவில் இரசாயனத் தைப் பாவித்து அழிப்பு செய்வது சாத்தி யப்பாடது உள்ளது. பொதுவாக இந்நோய் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த வயல் வதைப்புக் காலங்களில் நீர் முகாமைத் துவம், நீர் தேங்கி நிற்கும் குட்டைகளில் மீன் வளர்ப்பு ஆகியன மூலம் குடம்பி, கூட் டுப்புழுவை அழிக்க ஆலோசனை வழங் கப்படுகின்றது. அத்துடன் நுளம்பு கடிப் பதைத் தடுக்க நுளம்பு வலை, நுளம்புத்திரி போன்றவைகளைப் பாவிக்க ஊக்கப்படுத் தப்படுகின்றது.

மழைக்காலங்களில் பன்றிகளில், நாரை, கொக்கு போன்ற நீரில் சஞ்சரிக்கும் பறவை களிலும் இவ்வைரசு நுளம்புகள் மூலம் கடத்தப்பட்டு பன்றிகளில் மிக அதிகமாக விருத்தியாகின்றன. வைரசின் களஞ்சிய மாக இருக்கின்றன. பின்னர் நுளம்புகள் மூலம் மேலும் ஏனைய விலங்குகளுக்கும மனிதர்களுக்கும் கடத்தப்படுகின்றன. விலங் குகளில் நோய் அறிகுறிகள் தென்படுவ தில்லை. பன்றிகளில் போன்று வீட்டில் இருக்கும் புறா, கோழி போன்றவற்றிலும இவ் வைரசின் வாழ்க்கை வட்டம் அமைவ தாக அண்மைய ஆய்வுகள் காட்டுகின்றன.

மனிதனுக்கு நுளம்பு மூலம் மட்டுமே இந்நோய் கடத்தப்படுகின்றது. வேறு வழிக ளில் கடத்தப்படுவதில்லை. வீட்டு சூழலுக்கு அண்மையில் இருக்கும் பறவையினங்களி லும் வாழ்க்கை வட்டத்தை இவ்வைரஸ் அமைத்துக் கொள்வதனால் அவையும் ஜபபானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு பங் களிப்பு செய்யக் கூடிய ஆபத்துள்ளது.

சுகாதாரத்தை ,மேம்படுதததும் மேலும் ஒரு நடவடிக்கையாக ஜப்பானிய மூளைக காய்ச்சல் தடுப்பு மருந்து வழங்கப்படுகின் றது. சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப பிாிவு இத் திட்டத்தை அமுல் நடத்துகிறது. ஆரம்பத்தில நோய் தீவிரமாக பரவிய மாவட் டங்களில் 1988 முதல் இது நடைமுறைப் படுத்தப்பட்டது. பின்னர் நோய் இலங்கை யின் வேறு பாகங்களிலும் பரவியதால் தடுப்பு மருந்து வழங்கும் திட்டமும் விஸ் தரிககப்பட்டது.

2003ஆம் ஆண்டு முதல் யாழ்.மாவட்டத் திலும் இது நடைமுறைப் படுத்தப்படு கின்றது. இதன் பிரதான நோக்கம் நோய் ஏற்பட்டு மரணம் அல்லது மூளை பாதிக் கப்பட்டு ஊனநிலை ஏற்படுவதைத் தடுத் தல், இதற்காக நோய் ஏற்படக்கூடியவர்களின உடலில் நோய் எதிாப்பு சக்தியை உயர் அளவில் பேணுவதாகும்.

தடுப்பு ஊசி இரு முறையாக வழங்கப் படும. ஆரம்ப நீர்ப் பீடனம், மேலதிக நீர்ப் பீடனம், ஆரம்ப நீர்ப் படனம் மூன்று தடவை களிலும, மேலதிக நீர்ப்பீடனம் நான்கு வரு டங்களின் பின்னரும் வழங்கப்படும்.

**வழங்கும் கால இடைவெளி**

முதலாவது : 1வயது (12 மாதம்) முடிந் தவுடன்

இரண்டாவது : முதல் தடவை வழங்கி 1-4 வாரங்களின் பின்

மூன்றாவது : இரண்டாவது வழங்கி ஒரு வருடத்தின் பின்

நான்காவது :மூன்றாவது வழங்கி நாலு வரு டங்களின் பின்.

தடுப்பு மருந்து வழங்கல் ஒரு வயது முடிவிலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. முதல மருந்து வழங்கி 1-4 வரை இடைவெளியி னுள் இரண்டாவது மருந்து வழங்கப்படல் வேண்டும் மூன்று தடவையும் குறிப்பிட்டுள்ள இடைவெளியில் தடை மருந்து வழங்கினால் பிள்ளைக்கு நான்கு வருடங்கள் பாதுகாப்பு அளிக்கும். யாழ்.மாவட்டத்தில் இவ் வருடம் ஒரு வயது முதல் 10 வயது வரையான சகல பிள்ளைகளுக்கும் இரண்டு சுற்றுக்களில் இம் மருந்து வழங்கப்பட இருக்கிறது. முதல் சுற்று இன்று சனிக்கிழமையும் இரண் டாம் சுற்று ஜூலை 23ஆம் திகதியும் நடை முறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நான் காவது தடவை வழங்கப்படும் மேலதிக மருந்து பாடசாலைகளில் வசதிக்கேற்ப கொடுக்கப்படவுள்ளது.

த. தஜீகரன்
சுகாதார கல்வி உத்தியோகத்தர்,
சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

தடுப்பு மருந்து வழங்கிய பின்னா எவ் வித பரிகாரமும் செய்ய வேண்டியதில்லை. வழமையான உணவு உண்ணலாம், விளை யாட்டுக்களில் ஈடுபடலாம். மிக மிக அரி தாக சிலருக்கு ஒவ்வாமை ஏற்படலாம். காய்ச்சல், ஊசி போட்ட இடத்தில் வீக்கம், தடிப்பு, எரிவு, நோ, உடலில் தழும்புகள, சொறி, வாந்தி, வயிற்று வலி போன்றவை இருபபின சமீபத்தில் உள்ள சுகாதார வைத் திய அதிகாரி, வைத்தியசாலை, பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாது, சுகாதார தொண்டர்களுக் குத் தெரியப்படுத்தவேண்டும்.

இப் பயங்கரமான ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்தி ஆரோக் கியமாக வாழ இதற்கெதிராக தடுப்பு மரு ந்து வழங்குவதே பயனுள்ளதாக இருக்கும்.

---

# யாழில் பயிர்ச் செய்கைக்கு அதிக இரசாயன உரம் பயன்பாடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்கை பண்ணப்படுகின்ற மரக்கறிப் பயிர்களுக்கு விவசாயிகள் கூடுதலான இரசாயன உர வகைகளைப் பயன்படுததிவருவது குறித்து மாவட்ட மட்டத்திலுள்ள பொதுமக்கள் மிகு ந்த கவலை கொண்டுள்ளனர்.

இதன்காரணமாக உற்பத்தி செய்யப் படுகின்ற மரக்கறிகளின் உண்மையான ருசித் தன்மை கெடடுப் போவதுடன் இரசாயன உரவகைகளில் இருந்து பல்வேறு வித மான நோய்களும் ஏற்பட்டுவருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில தற்போது இயற்கைப் பச்ளைகளைப் பயன் படுத்தி மரக்கறிப் பயிர்கள் செய்கின்ற நிலைமை பெருமளவில் அருகிவருவதாக வும் தெரியவருகின்றது.

மரக்கறிப் பயிர்களுக்கு அதிகமாக இரசாயன உர வகைகள் பாவிப்பதைத் தடு த்து நிறுத்த வேண்டிய விவசாய அமைப் புகளும் விவசாயம் சார் திணைக்களங்களும பொதுமக்களின் உடல் நலத்தில் எவ்வித அக்கறையும் காட்டாது விவசாயிகளின் நன் மையை மட்டுமே கருத்தில் கொண்டு இர சாயன உர வகைகளைப் பயன்படுத்து வதையே ஊக்குவித்து வருவதாகவும் தெரி யவருகிறது. (ற-16)

# பாடசாலைகளில் உள்ள தேநீர்சாலைகளில் சிகரெட் விற்பனை தடை செய்யப்பட வேண்டும்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிர பல்யமிக்க பாடசாலைகளில் நடாத்தப்படு கின்ற தனியார் தேநீர்சாலைகளில் சிக ரெட் வகை விற்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டும் என மாவட்டத்திலுளள சிறுவர் அமைப்புக்கள கோரிக்கை விடடு வரு கின்றன.

பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள சிகரெட்டுக்கள் புகைப்பதனால் அங்கு பயில் கின்ற மாணவர்கள் மத்தியில் தப்பான புகைப்பழக்கம் உருவாக ஏதுவாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுவருகின்றது.

இதேவேளை, ஆசிரியர்கள், தநதையர் மற்றும் உடன்பிறப்புக்கள் சிறுவர்களைப் பயன்படுத்தி சிகரெட், பீடி போன்றவற்றி னைக கொள்வனவு செய்விப்பதும சிறுவர் கள் மத்தியில் தவறான பழக்க வழககங்கள் உருவாக வழி வகுக்கும் என்றும் சிறுவா அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன எனத தெரியவருகின்றது.

எனவே, எதிர்கால சமுதாயத்தில் அக் கறை கொண்டவர்கள் மத்தியில் நல்ல சிந் தனைகளையும் நற்பழக்கவழக்கங்களை யும் ஏற்படுத்துவதில் பெரியோர்கள் முன உதாரணமாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-16)

# மஹோற்சவம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானததின் மஹோற்சவப் பெருவிழா எதிர் வரும் 26ஆம திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வேட்டைத் திருவிழா எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதியும் சப்பறத் திருவிழா இரண் டாம் திகதியும் தேர்த்திருவிழா மூன்றாம் திக தியும் தீர்த்தத் திருவிழா நான்காம் திகதி யும் பூங்காவனம் ஐந்தாம் திகதியான வெள் ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளன. (ற-16)

# 775 இலக்க பஸ் சேவை இம்மாதம் முதல் ஆரம்பம்

யுத்த நிலைமைகள் மற்றும் பாதைகள் சர்கேடான தன்மை காரணமாக கடந்த பத்து வருடங்களாகத் தடைப்பட்டிருந்த சங் கானை சாவகச்சேரிக்கான 775 இலக்க பஸ் போக்குவரத்துச் சேவை இம் மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பஸ் சேவையானது சங்கானையில் இருந்து புறப்பட்டு சுன்னாகம் வந்து புத்தூா, மட்டுவில் கனகம்புளியடி, பெருளம் சந்தி ஊடாக சாவகச்சேரி வரை நடாத்தப்படுகிறது.

தினம் காலை மாலையென இரண்டு சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை குறி த்து இப்பகுதியல் இருக்கின்ற பொது மக்களும் மாணவர்களும் பெரு நன்மை அடைந்து வருகின்றனர் எனத் தெரிய வரு கின்றது.

பாடசாலை தினங்களில் இப்பஸ் சேவை சாவகச்சேரி இந்துக்கல்லூரி வரை சென்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும. (ற-16)

# கலை இலக்கியப் பெருவிழா

(தென்மராட்சி)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு கலாசாரசபை நடாத்தும் தேசிய கலை இலக்கியப் பெருவிழா இன்று காலை 9.00 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் தீவகம் வடககு உதவி அரச அதிபா க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தின ராக யாழ்.மேலதிக மாவட்டச் செயலர் (நிதி) எஸ்.சண்முகரட்ணமும் சிறப்பு விருந்தினர்க ளாக தலைமைப்பீட உதவி அரசாங்க அதி பா வே.வீரபத்திரபிள்ளை, வலி மேற்கு பிர தேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், வலி வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் சு.முரளித ரன், இலங்கை வங்கி உதவி பொது முகாமை யாளர் க.பாலசுப்பிரமணியம், ஊர்காவற்று றைப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பா ளர் சி.ஈழமாறன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களம் உதவிப் பணிப்பா ளர் சிவமகாலிங்கம், ஊர்காற்றுறைப் பல நோ.கூ.சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம், அனலைதீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர், ஊர் காவற்றுறை ப.தெ.அபி.கூ.சங்கப் பொது முகாமையாளர் ம.யோகராஜன், சி.கண பதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள் ளவுள்ளனர். (அ-7)

# பௌத்த தேரர்கள் உட்பட 17 பேரின் உண்ணாவிரதம் தொடர்கிறது

(தென்மராட்சி)

பௌத்த தேரர்கள் உட்பட 17பேர் பலப பிடடிய பிரதேச செயலாளர் அலுவலகத்தில கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பித் துள்ள உண்ணாவிரதம் தொடர்நதும் நடை பெற்று வருகின்றது.

பலப்பிட்டிய எல்லைக்குட்படட பகுதி யல் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு கிடைக்கவேண்டிய நிவாரணங்கள் நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி வித்தே இந்த உண்ணாவிரதம் மேற்கொள ளப்படுகின்றது.

நிவாரணம் நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் அவற்றை வழங்க வேண்டும் என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளோர் கோரி க்கை முன்வைத்துள்ளனர். (ற-9)

# பயங்கரவாதத்திற்கு நிதிவழங்கலை கட்டுப்படுத்தும் சட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு நிதிவழங்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதனைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில், இச்சட்டமூலத்திற்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி, நூ.ஆ, ஜே.வி.பி ஆகியன வாக்களித்தன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சின் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஷ்வரன ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

முஸ்லிம் காங்கிரஸும், ஜாதிக ஹெல உறுமயவும் வாக்களிப்பு நடைபெற்றபோது சபையில இருக்கவில்லை. (ச-4,9)

# முத்தலிப் கொலைக் குற்றவாளிகள் கொழும்பு நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுத்துறைக் கட்டளை அதிகாரி லெப்ரினன் கேணல் நிஸாம் முத்தலிப்பின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதன்போது இவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்களும் ஏனைய நால்வரும் முத்தலிப்பின் கொலை தொடர்பில் கடந்த 5ஆம் திகதி இரத்மலானை அதிஉயர் பாதுகாப்பு வலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இதன்போதுஅவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சிங்களவர்கள் என்றும், ஏனைய நால்வரும் கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

# பேக்கறி உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கினார் உணவு மருந்து பரிசோதனை அதிகாரி மகாதேவன்

உணவு விநியோகம் செய்யும் வாகனங்களில் பயணிகளை ஏற்றி போக்குவரத்துக்குப பயனபடுத்துவது முற்றாக தடுக்கப்பட வேண்டியதொன்றாகும் என யாழ்.சுகாதாரத் திணைக்கள உணவு மருந்து பரிசோதனை அதிகாரி க.மகாதேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சிரேஷ்ட பொதுச் சுகாதார அதிகாரி து.கிளினடஸ தலைமையில் நடைபெற்ற உணவுஉற்பத்தி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலில் உரையாற்றிய மகாதேவன் மேலும் தெரிவித்ததாவது,

யாழ். மாவட்டத்தில் இன்று பல பேக்கறிகள போட்டியில் பாண், பணிஸ் போன்றவற்றை உற்பத்தி செய்து வான்கள் ஊடாக காலையும் மாலையிலும் கடைகளில் விநியோகம் செய்து வருகின்றது. இது தவிர்ந்த மற்றைய நேரங்களில் பிரயாணிகள் போக்குவரத்துக்கும்,பொருள் கொள்வனவுக்கும் பயன்படுத்தி வருவதாக முறைப்பாடு எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு செய்வதனால வானில், பல்வேறு தூசுகள் மற்றும் அசுத்தங்கள், உணவுத் தொற்று ஏற்படும் என்பதனால் இவ்விடயததில் விசேட கவனமெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதனைத் தவிர, காலை வேளைகளில் குறைந்தநேரத்தில் விரைவாக பாணை விநியோகிக்க வேண்டும் என்ற நோக்கில் பெட்டிகளை மூடாதும், கையில், மார்புடன் சேர்த்து பாணை அடுக்கி விநியோகிப்பதும் நிறுத்தப்பட வேணடும் எனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் பேக்கறி உரிமையாளர்கள் பாண் வநியோகிக்கும் பெட்டிகளைத் தினமும் நன்கு சுத்தம் செய்யவேண்டும் எனவும் மற்றும் ஒவ்வோர் பேக்கறியினது பெயர்,முகவரி எழுதப்பட்டு தீந்தை பூசி சுத்தமாக வைத்திருக்கவேண்டும எனவும்ஒவ்வோர் பேக்கறியின் வளவினுள் கோழி, நாய் போன்றவற்றை வளர்த்தல் கூடாது எனவும், பேக்கறியின் சுற்றாடல் எப்போதும் மிகவும் சுத்தமாகக் காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ-252)

# க.பொ.த (சா/த) மாணவருக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைககுத் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆட்பதிவுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது என்று திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அடையாள அட்டை விண்ணப்பங்களை ஆட்பதிவுத் திணைக்களத்தில் சமர்ப்பிப்பது தாமதங்களைத் தவிர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்றும் மாணவர்களின் விண்ணப்பப் படிவங்களை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பு இம்முறை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

# பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கலை வட்டக் குழுக்கள் அமைப்பு

(திருநெல்வேலி)

யாழ்மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தனது பணிகளை விரிவுபடுத்தும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கலை வட்டக் குழுக்களை அமைத்து வருகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களை உள்ளடக்கி இந்தக் கலை வட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் சங்கத்தலைவர் வே.தவச்செலவன் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஊடகவியலாளர்களிற்கு உபகரணம் வழங்குதல், கலைவட்டம் அமைத்தல் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தககது. (ரு-43)

# நிதி இருந்தும் வரைபடம் இன்மையால் தாமதமடையும் பாடசாலைக் கட்டடம்

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த ஆழியவளை சி.சி.த.க பாடசாலையின் நிரந்தக் கட்டடம் அமைப்பதறகு ஜப்பான் ஜெய்கா நிறுவனம் முன்வந்துள்ளபோதும், பாடசாலையின வரைபடம் இன்னும் அவ் நிறுவனத்திடம் கையளிக்காததால் பாடசாலை நிறுவும் திட்டம் தாமதம் அடைந்து வருவதாக பாடசாலை சமூகம் குற்றம சாட்டியுள்ளது.

இப் பாடசாலை அமைவதற்குரிய வரைபடம இரண்டு தடவை தயாரிக்கப்பட்டதாகவும, ஆனால நீண்டகால தூர நோக்குடன் பாடசாலை அமைய வேண்டிய இடத்தில் காணி ஒதுக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, மேலும் காலம் தாழ்த்தாது இப் பாடசாலை எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பொதுவான இடத்தில் காணியைத் தெரிவு செய்து அதற்கான வரைபடத்தை விரைவில் நிறுவனத்திடம் சமர்ப்பிக்குமாறு பாடசாலை சமூகம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-35)

## யானைகளை பாதுகாக்க நடவடிக்கை

மனிதர்களினால் யானைகள் தாக்கப்படுவதைத் தவிர்த்து யானைகளைப் பாதுகாக்க விஷேட திட்டம் ஒன்றை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் ஆரம்பத்துள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 30 கோடியை வழஙகியிருக்கின்றது. இந்தத் திட்டம பொலனறுவை, புத்தளம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மின்சாரப் பிரிவுகள் அமைக்கப்படுவதன் மூலம் யானைகள் மனிதர்கள் வாழும் பிரதேசங்களில் நடமாடுவதில் இருந்து அவற்றின் இயற்கையான வாழ்வடங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். (ரு-2)

# ஜனாதிபதி தேர்தல் திகதியை அறிவிப்பது தேர்தல் ஆணையாளரின் கடமை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவித்து மக்களின் உரிமையைக் காப்பதற்கு தேர்தல் ஆணையாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின்பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவிததுள்ளார்.

இந்த நிலைமையை சீராக்க ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் மக் கள் பேரணியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டபோதே கரு ஜயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிற்குப் புதியதொரு தலைமையைத் தெரிவு செய்ய மக்கள் ஆவலாகக் காத்திருக்கின்றனர். மக்களுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் உரிமையைக் காப்பது தேர்தல் ஆணையாளரின் முக்கிய கடமையாகும.

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு எனபன முழுமையாகச் சீர்குலைந்து போயுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் பேரணியில் கலந்து கொணடிருக்கும் மக்கள் வழங்கும் தகவல புதிய தலைமைத்துவம் ஒன்று என்பதேயாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கோரும் வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்கள் அங்கு இருக்கும்பொழுதே நாட்டில இடம் பெறுகின்ற தேர்தலில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் அமைத்துத் தருமாறு அங்கு வேலை செயவோர் சார்பாக ஒரு அமைப்பு அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது.

நாட்டு மக்களின் ஜனநாயக ரீதியான வாக களிக்கும் உரிமையைப் பாவிப்பதற்கு வெளிநாட்டில் உள்ள மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக தாம் முழு மனதுடன் ஈடுபடுவதாக அந்த அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

அண்மையில் கொழும்பில் இந்த அமைபபினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதன பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித் துள்ளனர். அத்துடன் இது தொடர்பாக மகஜர் ஒன்றை எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க இருப்பதாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)

# தேசிய பாடசாலைகளில் முதலாம் ஆண்டு அனுமதி

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் அனுமதி பெற்ற பிள்ளைகளின் பெயர் விபரங்கள் சர்வதேச தகவல் வலைப் பின்னலில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விபரங்களை அறிய விரும்புவோர் கல்வியமைசசின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.moc.sov.lk என்ற முகவரியில் பார்வையிடலாம். இந்த விபரங்கள் விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. அனுமதி பெறாத பிள்ளைகளின் பெயர் விபரங்களும் வெளியிடப்பட இருக்கின்றன.

இவ்வாறான பிள்ளைகளின் பெற்றோர் தாக்கல் செய்யும் மேன்முறையடுகளை ஆராய்வதற்கு பிரத்தியேக அமைப்பு ஒன்று ஸ்தாபிககப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு மேலுமதெரிவித்துள்ளது. (அ-7)

# வெளிநாட்டு தூதுவர்கள் மன்னாருக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரும், ஜப்பானிய தூதரக அதிகாரிகளும் கடந்த புதன்கிழமை மன்னாருக்கு விஜயம் செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியத் தூதுவர் கிரேக் பிரெஞ்ச் தனது விஜயத்தின்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கத்துடன கலந்துரையாடினார்.

தூதுவருடன் தூதரகத்தின் அரசியல் விவகார இரண்டாம் செயலாளர் வில் நங்கெரிவ், அபிவருத்தித் திட்ட நிபுணர் அலெக்ஸ் நொக்ஸ் ஆகியோரும் சென்றனர்.

தூதரகக் குழுவினர் சிலாபத்துறை பகுதிக்குச் சென்று சுவிடிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினின் பணிகளைப் பார்வையிட்டதோடு, எடிபல ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் இடம் பெயர்ந்து தமது சொந்தக் கிராமமான மளவராயர் கட்டை அடம்பன் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்களையும் சென்று சந்தித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஜப்பானிய தூதரக அதிகாரிகள் குழு ஒன்றும மன்னாருக்குச் சென்று மாவட்ட நிலைமைகள் தொடர்பாக கருத்தறிந்துள்ளது.

இதேவேளை, கடந்த 5ஆம் திகதி இந்தியத் தூதுவர் நிருபமராவ் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடததக்கது. (ச-4)

# கனடா - கொற்றாவத்தை நலன்புரிச் சங்கம் நிதி உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டிலுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு கனடா - கொற்றாவத்தை நலன்புரி சங்கம் பல உதவிகளைச் செய்து வருகிறது.

இவ் உதவித் திட்டத்தின் கீழ் பெற்றோர்களை இழந்த 50 மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, ஒவவொரு மாணவருக்கும் 10 ஆயிரம் ரூபா வீதம் அவர்களது பெயரில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியல் ஐந்து இலட்சம் ரூபா வைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ் உதவி முதற்கட்டமாக வழங்கப்படுகிறது என்றும் வறுமைக் கோட்டிலுள்ள மாணவர்களுக்கு தொடர்ந்தும் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-35)

# உளநலம் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு மட்டக்களப்பில் சிகிச்சை வழங்கப்பட்டது

சுனாமியினால் உளநலம் பாதிக்கப்பட்ட சிறார்களை பரிசோதித்து சிகிச்சை வழங்கும் நடவடிக்கை மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்டது.

காத்தன்குடி அங்கவீனர் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்சிகிச்சை முகாமில் 125 உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.

பிரிட்டிஸில் உள்ள இலங்கையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரினாலேயே இந்தப் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் வழஙகப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் வறுமையினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் இச சிகிச்சை அளிககப்பட்டது.

அதேவேளை, மட்டக்களப்பில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளிலும் இச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. (ரு-8)

# மாணிக்க வாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலய பரிபாலகரின் அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.00மணிக்கு ஆலயப் பூசையுடன் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அபிசேகம், விசேட பூசைகளை நடாத்தவுள்ளது.

தொடர்ந்து திருவடிப்பெற்ற சருக்கம், புராண படலம் நடைபெற்று மகேஸ்வரபூசையும் இடமபெறும்.

மாலை 5.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்திலும் குருபூசை இடம்பெறும். (ரு)




## ஓடி வா பாப்பா



பாப்பா பாப்பா ஓடி வா!
பாடம் படிக்க ஓடி வா!

காலை மாலை நேரத்தில்
கனிவாய் பாடம் படிக்க வா!
பாலைப் பருகும் குழவி போல்
பாடங்களைப் படிக்க வா!

சாதி மத பேதத்தை
தவிடு பொடி ஆக்க வா!

நீதி எல்லா மனிதர்க்கும்
நீ வழங்க ஓடி வா!

ஏழை என்று உலகத்தில்
எவரும் இல்லை அறிந்து கொள்!
கூழைக் குடிக்கும் ஏழையை
குறைந்தவன் என்று எண்ணாதே!

நாடு நன்கு வளர்ந்திட
நமக்குள் வேண்டும் ஒற்றுமை
கேடு எல்லாம் நீங்கிட
ஒனறு சேர்வீர் குழந்தை காள்!

பிரஞ்சு நாட்டு மன்னனைப்
புறக்கொடுக்கச் செய்தது
'ஈற்றன்' என்ற கல்லூரி
மாணவர்கள் அறிந்து கொள்!

ஓடி ஆடி விளையாடு
ஓய்ச்சல் இன்றி விளையாடு
கூடிப் பாடி விளையாடு
குதூகலமாய் விளையாடு!

சிபி

## ஒரே நேரத்தில் இரண்டு பக்கமும் பார்க்கக் கூடிய உயிரினம்




பல்லி வகையைச் சேர்ந்த பச்சோந்திகள் மரங்களிலும், புதர் காடுகளிலும் வசிக்கின்றன. இவை பெரும்பாலும் பூச்சிகளை உணவாக உட கொளகின்றன.

இதனுடைய வித்த'யாசமான அமைப்பாக விளங்கக் கூடியவை இரண்டு கூம்பு போன்ற வடிவமுடைய உறையில் உள்ள கண்கள் ஆகும். இவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் செயல்படக் கூடிய வகையில் உள்ளன. இதனால் பச்சோந்திகளால் ஒரு கண்ணால் முன்புறமும் மற்றொரு கண்ணால் பின்புறமும் பார்க்க முடியும்.


பச்சோநதிகள் இடத்திற்குத் தகுந்தவாறு தங்களது நிறத்தை மாற்றிக்கொள்ளும் திறன் உடையது. இவை பூச்சிகளைப் பார்க்கும் போது தன்னுடைய பெரிய நாக்கினை வெளிக்கொணர்ந்து தனது உணவைப் பிடித்து மறுபடியும் வாய்க்குள் இழுத்துக கொள்ளும் தன்மை படைத்தவை.

## கண்டுபிடியுங்கள்

சிறுவர்களே! கீழே உள்ள படத்தில் 1-84 வரையுள்ள இலக்கங்களை தொடர்புபடுத்தி இங்கே ஒளிந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.



## இவை உங்களின் ஓவியங்கள்



க.லிதர்சன்
யா/சிதம்பராக் கல்லூரி




கி.அஜித்
யா/மத்திய கல்லூரி



S.கஜசங்கவி
இணுவில்.

## கின்னஸ் சாதனை



மிக மெல்லியதான மனித தலை முடியிலேயே ஓவியம வரைவது, முடியைப் பல பாகங்களாகப் பிரிப்பது போன்ற சாதனைகளை இதுவரை உலகில பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் செய்துள் ளனர்.

ஆனால், ரஷ்யாவில் உக்ரைனைச் சேர்ந்த மைக்கேல் மகல்யுக் என்பவர் எல்லோரையும் கீழே தள்ளிவிட்டு முன் நிற்கிறார். தலைமுடி ஒன்றைக் குடைந்து குகைப் பாதையை உருவாக்கியுள்ளார். பின்னர் அந்தக் குகைக்குள் செல்லக் கூடிய உலகிலேயே மிகச்சிறிய ரயில் ஒன்றையும் உருவாக்கி உள்ளார். அந்த ரயிலல் 15 பெடடிகள் இணைக்கப்பட்டுள்ளன. மைக்கேலின் இந்த இரண்டு சாதனைகளையும் மைக்ரோஸ்கோப் மூலம்தான் பார்க்க முடியும!

## உங்களுக்குத் தெரியுமா?

- உலகத்திலேயே அதிக நூல்களை இயற்றிய நூலாசிரியர் அலெக்சாண்டர் டூமாஸ்.
- உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த பூவைத் தரும் செடி குங்குமப் பூச்செடி.
- உலகிலேயே மிகவும் உயரமான நகரம் சீனாவில் உள்ள வென்சுவான் என்ற நகரம்.
- இந்தியாவுக்குச் சொந்தமாக 1,197 தீவுகள் உள்ளன.
- மீன்களே இல்லாத கடல் - சாக்கடல்.
- உலகின் முதல் கம்பியூட்டர் அமெரிக்க கப்பல் படையில் பயன்படுத்தப்பட்டது.
- மிகப் பெரிய விரிகுடா வங்காள விரிகுடா ஆகும். இதன் நீளம் 2 ஆயிரத்து 250 மைல்கள்.
- உலகிலேயே பூகம்பத்தால் அவதிப்படும் நாடு மெக்சிகோ.
- உலகிலேயே கால்நடைகள் அதிகம் உள்ள நாடு இந்தியா.

## உழைப்பாளி!

ஒருநாள் பல்லுபட்டி என்ற ஊருக்கு முனிவர் ஒருவர் வந்தார். அவரை அவ்வூரார் வரவேற்கவில்லை. அவருககு மரியாதை செய்யவில்லை. உணவும் தங்குமிடமும் தந்து உபசரிக்கவில்லை. இதனால் அவர் மிகவும் வருத்தமடைந்தார். எனவே, அவ்வூரை விட்டு வெளியேறினார்.

“என்னை ஏற்றுக்கொள்ளாத இவ்வூர் துன்பமடையட்டும். நான்காண்டுகள் மழையில்லாமல நலிந்து போகட்டும்'' என்று சபித்துவிட்டு வெளியேறினார்.

முனிவரின் சாபத்தைக் கேட்டு மக்கள் கலங்கினர். ஆனாலும், பிற நகரங்கள், கிராமங்களில் மழை பெய்யும் என்பதறிந்து ஒருவாறு தேற்றிக் கொண்டனர்.

அவ்வூரில் சாத்தப்பன் என்று ஓர் இளைஞன் இருந்தான். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அவனை தேனீக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். உழைக்காமல் அவன் உண்பதே இல்லை.

அன்று காலையில், அவன் ஏரைத் தோளில் சுமந்துகொண்டு வயலை நோக்கி நடந்தான். ஏர் மாடுகள் அவன் பின்னால் நடந்து வந்தன. தனது எல்லா வயலையும் உழவு செய்தான். சில நாட்களில் உழவு வேலை முடிந்தது. அந்த ஆண்டு மழை பெய்யவில்லை.

ஓராண்டு முடிந்தது. ஆடிமாதம் பிறந்தது. சாத்தபன் கலப்பை மறறும் மாடுகளுடன் வயல்வெளி நோக்கி நடந்தான். தன் எல்லா வயல்களிலும் ஏரோட்டினான். அவன் வயல்கள் வித்தியாசமாய்த் தொந்தது. எல்லா வயல்களிலும் களையும் முடபுதாகளும் வளர்ந்து மண்டிக்கிடந்தன. ஆனால் சாத்தப்பனின நிலம் துப்பரவாய் இருந்தது.


இவன் வயலில் உழவு செய்வதைப் பார்த்து மக்கள் கேலி பேசினர். 'நான்காண்டுகள் மழை பெய்யப் போவதில்லை என்பது எல்லோருக்கும தெரியும். பின்னர் இவன் மடடும் உழவு செய்வது ஏன்?' என்று ஒருவர் மற்றவரைக் கேட்டு, எல்லோரும் எள்ளி நகையாடினர். அவர்கள் இகழ்ந்து பேசுவதையெல்லாம் அவன் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்த ஆண்டும் மழை பெய்யவில்லை.

புதிய ஆண்டு பிறந்தது. குறிப்பிட்ட மாதம வந்தது. சாத்தப்பன் தனது நிலத்தை உழுதான். அவன் ஆண்டுதோறும் உழவு செய்வதால் அவன நிலம் மென்மையானதாக இருந்தது. கடினமான கட்டாந்தரையை அவன் நிலத்தில் பார்க்க முடியவில்லை. மக்களின் கேலிக்கு மதிப்புத் தராமல் உழுது முடித்தான்.

மூன்றாம் ஆண்டு பிறந்தது. மழை பெய்யவில்லை. சாத்தப்பன் உழவு செய்யப் புறப்படடான். மக்கள் கேலி செய்தனர். “சாத்தப்பா, மழை பெய்யாது என்று உனக்கு உறுதியாகத் தெரியும். பினனர் ஏன் நீ உழவு செய்கிறாய்?'' அவனிடம் பலர் இந்தக கேள்வியைக் கேட்டனர்.

“நான்கு வருடங்களுக்குப் பின் மழை பெய்யும். அப்போது ஏர் உழுவது எப்படி என்பதே மறந்து போயவிடும். அது மறவாமல் இருப்பதற்காகவே நான் வருடம்தோறும் உழவு செய்கிறேன்'' என்று சாத்தப்பன் பதில் சொன்னான்.

எல்லா ஆண்டுகளையும் போல் அப்போதும் அவன் உழவு செய்து நிலத்தைத் தயார் செய்து வைத்தான். அந்த ஐந்தாம் ஆண்டு நல்ல மழை பெய்தது. உடனடியாக அவன் விதைத்தான். பின்னர் களை பறித்தான். களைகள் அதிகமாய் இல்லை.



எனவே, வேலைகள் எளிதாக இருந்தன. பின்னர் உரமிட்டான். மழை பெய்தது. அவன் பயிர்கள் செழித்து வளர்ந்தன.

சாத்தப்பனின் விளை நிலங்கள் பச்சைப் பசேலனப் பிரகாசமாக விளங்கியது. செடிகளும் கொடிகளும் பூவும் பிஞ்சுமாய்க் குலுங்கின.

பிற நிலங்களில் பலர் உழவு போடவில்லை. ஏனென்றால் அவர்களிடம் இருந்த கலப்பைகள் கரையானுக்கு இரையாகி இருந்தன. புதிய கலப்பைகள் செய்ய தச்சனைத் தேடிச சென்றனர். பலர் உழவு போடும் வேலையை மறந்துவிட்டனர்.

சாத்தப்பனின் நிலம் அறுவடைக்குத் தயாராய் இருந்தது. அறுவடை செய்த அவன் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான். நான்காண்டுகளில் பெறும் விளைச்சலை அவன் ஒரே ஆண்டில் பெற்றான்.

அவனைக் கெலி செய்தவர்கள் வாயடைத்து நின்றனர். அவர்களின் விளை நிலங்கள் தரிசு நிலங்களாய் மாறி இருந்தன. அவற்றைப் பண்படுதத் தயார் செய்வது என்பது உடனடியாக இயலாத செயலாகும்.

**சிறுவர்களே!**

படிக்கும் நீங்கள் எப்போதும் படிக்க வேணடும். நாளைக்கு படிக்கலாம். பரீட்சை சமயத்தில் படிக்கலாம் என்று தள்ளிப்போட்டால் மிகவும கஷ்டமாக இருக்கும். எனவே அன்றைய பாடத்தை அன்றே படிக்கவேண்டும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

## தீர்க்கமான முடிபெடுக்கும் பொறுப்பு தமிழ்க் கூட்டமைப்பிடம்

இலங்கையின் சமகால அரசியல் சூழ்நிலையானது குழப்பமடைந்து காணப்படுகின்றது. இனவாதத்திற்கு முன்னுரிமை அளித்த காலம் கடந்து தமிழர்களை ஒதுக்கிவிட்டு எதனையும் செய்ய முடியாது என்பதை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் உணரும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

அரசு கவிழ்ந்தாலும் பரவாயில்லை. பொதுக் கட்டமைப்பை கைவிட்டால் அது நாட்டிற்கு பெரும் கேடாகிவிடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியதிலிருந்து, தமிழர்களின் பிரச்சினை சர்வதேசமயப்பட்டுவிட்டமை உறுதியாகின்றது.

அதேநேரம் இலங்கைக்கு உதவும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியுள்ளன. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் அரசியல்கட்சி ஒன்று பொதுக்கட்டமைப்பை எதிர்க்க, ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள், சர்வதேசம் என்ற பரந்த சமூகப் பரப்பு பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது, விடுதலைப் புலிகளின் மண் மீட்புப் போராட்டத்திற்கு கிடைத்த அங்கீகாரம் என்றே கூறவேண்டும்.

இலங்கையில் காலத்திற்குக் காலம் சிக்கல்கள், குழப்பங்கள் என்பன ஏற்பட்டுள்ளன. அப்போதெல்லாம் தமிழர்கள் பாதிப்படைந்தார்கள் என்பதே உண்மை.

அதாவது கடந்த காலங்களில் நிலவிய அரசியல் சூழ்நிலையானது தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே அமைந்திருந்தது.

இதற்கு இலங்கை ஆட்சியாளர்களின் இனவாதப் போக்கோ அல்லது சர்வதேசத்தின் பாராமுகமோ அன்றி தமிழ்த் தலைவர்களின் தீர்க்கதரிசனத்தின் குறைபாடோ காரணமாக இருந்திருக்கலாம்.

இவை பற்றிய கிண்டல்கள், ஆய்வுகள் காலத்தை விரயமாக்கும் என்பதால் அவற்றை ஓர் பட்டறிவாக மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேசமயம் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய்ந்தால் அது தமிழர்களுக்கு சாதகமா? அன்றி பாதகமா? என்பது அரசியல் சூழ்நிலையை நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

இது விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் மிக நிதானமாகவும் தீர்க்கதரிசனத்துடனும் செயற்படவேண்டிய தேவைப்பாடு உண்டு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை, பொதுக்கட்டமைப்பை தமக்கு வாய்ப்பாகக் கொண்டு ஜே.வி.பியினர் யார்? அவர்களின் செயற்பாடு என்ன? என்பதை சர்வதேசத்திற்கு காட்டிவிட்டார்.

ஜே.வி.பியின் இனவாத சிந்தனையை இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமல்ல. சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தியதன் ஊடாக அந்தக் கட்சியின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளார். இது அவரின் அரசியல் ராஜதந்திரத்திற்கு நல்லதோர் உதாரணம். அதேவேளை பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய வைப்பதிலும் ஜனாதிபதியின் கணை ஏவப்பட்டுள்ளது.

இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ராஜதந்திர நுட்பம் வேலைசெய்ய வேண்டியுள்ளது. எந்த முடிவை எடுத்துக்கொண்டால், சர்வதேசத்தின் பார்வை தமிழர்களுக்குச் சாதகமாக அமையும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிபுகளை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

# அரசாங்கம் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்





## ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லையென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் வாக்குறுதிகளை நம்பி வாக்குகளை அளித்த மக்கள் இன்று பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நடாத்தும் மக்கள் சக்தி நடவடிக்கையின 6ஆவது நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்பன தொடர்பில் நம்பிக்கை அற்றுப் போய விட்டது.

அவர்களின் செயற்பாடுகளைப் பார்த்து மக்கள் வெறுப் படைநதுவிட்டனர். பிளக்கைக் கழற்றினால் எண்ணெய் விலை குறைவடையும் என்று கூறி பிளக்கைக் கழற்றினார். ஆனால் எண்ணெய்விலை அதிகரித்தது. வறுமையை ஒழிப்போம் என்றார்கள். ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணியின் ஆடசிக் காலத்தின்போது கிராமங்களின் வறுமை நிலை அதிகரித்தது.

ஆனால் தொடர்ந்தும் உரத்தின் விலையைக் குறைப்போம என்றனர். ஆனால் இன்று உரத்தின் விலை அதிகரிததுள்ளது. இப்படியாக இவர்களின் ஆட்சி மக்களை ஏமாற்றிச் சென்று கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தை மாற்றுவதற்கு மக்கள் மிகவும் ஆர்வமாகவுள்ளார்கள் என்பது இந்த மக்கள் சக்தி நடவடிக்கையின் மூலம் தெளிவாகின்றது.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து மக்கள் மிகவும் ஒரு குழப்பததில் உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

இம் மக்கள் சக்தியின் ஊர்வலததில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜ.எல்.பீரிஸ்,

சுனாமி ஏற்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ளன. உருப்படியாக எந்தவித புனர்வாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை. மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட, அழிவடைநத வீடுகளைப் புனரமைக்க மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவு 2 மாதங்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. தற்போது 3 மாதங்கள் கடந்துளளன. 6 மாதங்களாக இந் நிதியை வைத்துக் கொண்டு அரசாங்கம் என்ன செய்கின்றது எனக் கேள்வி எழுப்பினார்.

ஐககிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் அங்கு உரையாற்றுகையில், ஏழை மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாத அரசாங்கத்திற்கு எமது மக்கள் சக்தி ஒரு அடியாகும். அரசாங்கம் பல விடயங்களுக்காகத தவித்துக் கொண்டிருக்கின்றது. எதுவும் சரிவரவில்லை. தேர்தல் ஒன்று வந்தால் ஐக்கிய தேசியக் கட்சி தனியாகப் போட்டியிட்டு வெற்றிபெற்று அரசை அமைக்க முடியும் என்று குறிப்பிட்டார். (ற-8)

## 42ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை அரசின் வரலாற்றுச் சாதனை

### தொழிலமைச்சர் செனவிரத்ன பூரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் 2006ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெறமாட்டாது என தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மக்கள விடுதலை முன்னணி கூட்டமைப்பிலிருந்து விலகிய பின்னர் அரசாங்கம் கவிழும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர்.ஆனால் அரசாங்கம் தொடர்ந்து 5வருட காலம் ஆட்சியில் இருக்குமென அமைச்சர் அதாவுட செனவிரத்ன ரூபான் வெலவில இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆடசிக்காலத்தில் அரச நிறுவனஙகளை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்தது.எனினும கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்களால அதை விற்க முடியாமல் போய்விட்டதெனவும் இந்த ஆட்சிக் காலத்தில் வரலாற்றில் முதற் தடவையாக 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

## கூட்டமைப்பு அரசு நிலைக்க ஜே.வி.பியுடன் இணையுங்கள்

### பிரதமருக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை முன்கொண்டு செல்ல மீண்டும் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுமாறு அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் செயலாளர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதற்கென அமைச்சர்கள் அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர ஆகியோரையும் இணைத்துக்கொண்டு பிரதமர் முன்நின்று இந்தக் காரியத்தை செயற்படுத்துமாறு அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிரதமருக்கும் அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்களுக்கும் இடையே கடந்த 5 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இந்த வேண்டுகோளினை விடுத்துள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலையில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் அவரின் தனிப்பட்ட ஊழியர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இங்கு உரையாடப்பட்டது. (ற-4)

## இலங்கையின் முதல்தர பணக்காரர் ஜே.வி.பி

(கொழும்பு)

ஜே.வி.பியே இலங்கையில் மிகவும் பணம் படைத்த கட்சியென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியினரால் மாத்திரமே ஒவ்வொரு கிழமையும் மிகவும் வர்ணஙகள் நிறைந்த சுவரொட்டிகளை ஒட்டமுடியும். ஏனைய எந்தவொரு கட்சியாலும் அவ்வாறு செய்ய முடியாதெனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் முன்னர் நிறுவப்பட்டிருந்த இடதுசாரி அமைப்புக்களிலிருந்து ஜே.வி.பியினர் நிதியினைப் பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர், வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்களிடமிருந்து ஜே.வி.பியினர் பணம் பெற்று வருவதாகவும் கூறினார்.

அததுடன், இரண்டாவது பணக்காரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு பெருமளவு தொடர்புகள் இருந்தாலும் அவர்கள் இரண்டாவது இடத்திலேயே உள்ளனர்.

தம்மைப் போன்ற பணவசதி படைத்த கட்சிகள், பிரதான பணம படைத்த கட்சியினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கத்தான் முடியுமெனவும் ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

## வருடாந்தம் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட பிரச்சினைகளுக்கு இணக்க சபை தீர்வு

(கொழும்பு)

இணக்க சபைக்கு கொண்டுவரப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளில் 75 வீதமானவற்றுக்கு தீர்வு கிடைப்பதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

இணக்க சபையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் நீதிமன்றத்திற்கு செல்லவிருக்கும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சாதாரண பிரச்சினைகளுக்கு இணகக சபை முறை மூலம் தீர்வுபெற்றுக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் மேலும் சுட்டிகாட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பதாதிக்கப்பட்ட இணக்க சபை உறுபபினர்கள் 57 பேருக்கு ஆரம்ப கட்ட உதவிகள் வழங்கும் வைபவத்திலேயே நீதியமைச்சர் இக் கருத்துக்களை தெரிவிததுள்ளார்.

நாடு முழுவதும் 250 இணக்க சபைகள் செயற்பட்டு வருவதுடன் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இதன் எண்ணிக்கை 280 ஆக அதிகரிக்க எண்ணியுள்ளதாகவும் நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்துக்களுக்கு உரிமை கோரல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு சுனாமி உடன்படிக்கை சபையின் விசேட சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நீதியமைச்சர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-9)



## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

இறைவனிடம் செலுத்தும் அளவற்ற அன்பே பக்தி ஆகும். அளவற்ற அன்பின் மூலம் ஒருவன் மரணமில்லாப் பெருநிலையை அடைகறான். இதன்மூலம் அவனுக்கு முழுத் திருப்தி ஏற்படுகிறது. தனக்கு எத் தகைய இழப்பு நேரினும் அது குறித்து அவன் வருந்துவதில்லை. பிறர் மீதும் அவன் ஒருபோதும் பொறாமை கொள்வதுமில்லை. இறைவனை அறிந்த அவன் பித்தனாகிவிடுகிறான்.

சுவாமி விவேகானந்தர்

## சுனாமி நம்பிக்கை நிதியத்திற்கு...

அழைக்கப்பட்டுள்ள ஆழிப் பேரலை நிவாரண சபைக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை வழங்குகிறது.

பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களினதும் ஒத்துழைப்புடன் இந்தக் கட்டமைப்பு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படுமானால் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ம் திகதி ஏற்பட்ட மாபெரும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவரினதும் வாழ்கையினை மீண்டும் கட்டியெழுப்ப இது உதவுமென அமெரிக்கா நம்புகிறது.

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்காது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா 130 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் புனரமைப்புத் திட்டங்களுக்கு இந்த நிதியில் இருந்து ஒரு பகுதி வழங்கப்படும்.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்கா இந்த நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு வழங்காத போதிலும் ஏனைய நன்கொடையாளர்களின் பங்களிப்பினை அது வரவேற்கின்றது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது .

(இ-4)


மாணிக்கவாசகர் குருபூசை

மாணிக்கவாசகர் குருபூசை ஞாயிறு (10-07-2005) நாளை 6 மணியளவில் காரைநகர் ஈழத்துச்சிதம்பர மண்டபத்தில் திருவாசக முற்றோதலுடன் நடைபெற்று, பின்னர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் புராணபடலமும், மகேசுர பூசையும் நடைபெறும்

காரைநகர் சிவன் கோவில்-ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்

(9732)


## பொதுக்கட்ட...

இலங்கையில் உள்ள கனேடியத்தூதுவர் ரேமன் வெலரி, பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ்,

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் லவ்டர் வில்மர், அமெ ரிக்கத் தூதுவரகத்தின் அரசியல் துறை அதிகாரி பற்றீசியா மஹேனி, ஜப்பானின் பிரதிநிதிகளும இந்த வேண்டுகோளை விடுத்ததா கத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் தனித்தனியே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையினால் முஸ்லிம்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் இந்தச் சபைக்கு தன்னால் ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று ஹக்கீம் தன்னைச் சந்தித்த பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது சம்பந்தமாக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் கூட நடாத்தப்படவில்லை என குறிப்பிட்ட அவர் இந்த உடன்படிக்கைக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தும் எனவும் தெரிவித்தார்.

(இ-4)

# ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் இல்லை!

## மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் எனத் தெரிவு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு நிலையில் தொடர்ந்து இழுபறிகள் இருந்து வருவதை அடுத்து,

இவ்விவகாரத்தை ஆராய்வதற்கு ஜனாதிபதி தலைமையில் 6பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திலேயே இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் ஜனாதிபதி தலைமையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டாரநாயக்க, பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசென, நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம, நிமால் சிறிபால டிசில்வா, அலவி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இச்செயற்குழுக் கூட்டத்தில் தற்போது நிலவும் அரசியல் சூழ் நிலை குறித்து ஆராயப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சியில் மக்கள் சக்தி நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை கோரும் பிரச்சினை அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் ஒன்று 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதமே நடைபெறும் என மத்திய செயற்குழு தீர்மானித்தது என பொதுச்செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இல்லை என அவர் உறுதிபடக் கூறினார். (இ-4,6)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கொழகாமம் இயற்றாலையைச் சேர்ந்த
ராம்பாபு - சுதர்ஜினி தம்பதிகளின்
செல்வப்புதல்வி

செல்வி அபிஷா

தனது முதலாவது பிறந்த நாளை நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது அம்மம்மா வீட்டில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா. அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், அத்தை, மாமாமார், தயந்தா அன்ரி, பபிதா அன்ரி, மாருதி மச்சாள், பிரியா மச்சாள் அனைவரும் நயினை நாகபூஷணி அம்பாள் துணைகொண்டு பல்கலையும்கற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

ச.கடாட்சம் குடும்பம்

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(அம்மப்பா)

(C-1473)



NEW SCIENCE COLLEGE

யாழ் நகர்

இணைந்த கணிதம்

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

துரித மீட்டல்

வகுப்புக்கள் திங்கள் முதல் வெள்ளி வரை

ஆரம்பம் 11-07-2005 திங்கள் காலை 6.30 மணி (ப.நே)

BY-P. செந்தில்நாதன் B.sc



நியூ சிற்றி றேடேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C-அ-1348)



மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம்
(இலங்கை) வரை யாழ்ப்பாணக் கிளை

பேரன்புடையீர்!

எமது கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின்
மற்றுமொரு அபிவிருத்திக் கிளையானது

105, கண்டி வீதி, சாவகச்சேரியில்

இன்று (09.07.2005) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் 8.30 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஆகவே இந்தத் திறப்புவிழா ஆரம்ப வைபவத்துக்கு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரும் வருகைதந்து சிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

யாழ். கிளை முகாமையாளர்.

(அ-9692)



நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்.

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த

6'2"

காட்சி நேரம்: (பு.நே)
10.30, 2.30, 6.30, 9.30

வெகுவிரைவில்
அர்ஜுன், சினேகா நடித்த
சின்னா



நிறைஞ்சனாஸ் சினிமா

சங்கானை

சரத்குமார், ரமேஷ், பூஜா நடித்த

ஜித்தன்

காட்சி நேரம்: 11.00, 2.45
06.00 (பு.நே)



மனோகரா

யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்



சியான் விக்ரம்.சதா. விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

இசை: ஹரீஸ் ஜெயராஜ்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.